Registered as a news paper.

14/11/03

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ரம்ழான் 19 (14.11.2003) வெள்ளிக்கிழமை இதழ் :45

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள்
இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்

INTERNET

மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு

'திருமுருகன் கொம் நெற்'

இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310

(ச-1771)



கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது, விடுதலைப் புலிகளின் தரப்பில் கலந்துகொண்ட புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன், தலைவர் வே.பிரபாகரன், அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோரை முதற்படத்திலும் நோர்வேத் தூதுக் குழுவினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## தென்னிலங்கையில் அரசியல் குழப்பங்கள் நீடித்தாலும்

# யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்வதை நோர்வே அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்

## தேசியத் தலைவர் பிரபாகரன் வலியுத்து

(கிளிநொச்சி)

**சமாதான முயற்சிகளைத் தொடர்வதில், விடுதலைப் புலிகள் உறுதியாக இருப்பதாகவும், இதனால் - யுத்தநிறுத்த உடன்படிக்கையை குழப்பமில்லாமல், நடைமுறைப்படுத்திச் செல்வதற்கான உறுதிப்பாட்டை நோர்வே அரசு வழங்க வேண்டுமென, நேற்று தம்மைச் சந்தித்த நோர்வே பிரதிவெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினரிடம், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கேட்டுக்கொண்டார்.**

கிளிநொச்சியிலுள்ள அரசியற்துறை நடுவப்பணியகத்தில், நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் - நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெலகிசன் தலைமையிலான தூதுக்குழுவினருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே, மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது. இந்தச் சந்திப்பில் மேலும் -

வடக்கு - கிழக்கில் நிலையான சமாதானம் ஏற்படு

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அத்திவாரமாக யுத்தநிறுத்த உடன்படிக்கையே தற்போது உள்ளது. தற்போதைய நிலைமையில் யுத்தநிறுத்த உடன்பாடு தொடர்பான உறுதிப்பாடுகளை நோர்வே அரசே தரவேண்டும் என்றும் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மேலும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில்,



தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கேட்டுக்கொண்டார்.

கிளிநொச்சியிலுள்ள அரசியற்துறை நடுவப்பணியகத்தில், நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் - நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெலகிசன் தலைமையிலான தூதுக்குழுவினருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே, மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது. இந்தச் சந்திப்பில் மேலும் -

வடக்கு - கிழக்கில் நிலையான சமாதானம் ஏற்படுவதற்கு தென்னிலங்கையில் நடைபெறும் அதிகார இழுபறிப்போட்டி முடிவிற்கு வரவேணடும். அங்கு அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டால், நாம் சமாதான நகர்வுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லலாம் என்றும்,

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அத்திவாரமாக யுத்த நிறுத்த உடன்படிக்கையே தற்போது உள்ளது. தற்போதைய நிலைமையில் யுத்தநிறுத்த உடன்பாடு தொடர்பான உறுதிப்பாடுகளை நோர்வே அரசே தரவேண்டும் என்றும் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மேலும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், அரசியற்பணிகளில் ஈடுபடும்போராளிகளின் பாதுகாப்புக் குறித்தும், நோர்வேயின் உத்தரவாதத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொண்ட பிரபாகரன்,

தாம் யுத்தத்தை விரும்பவில்லை என்றும், அமைதியை - சமாதான வழியில் (10 ஆம் பக்கம் பார்க்க)



நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசனை தலைவர் பிரபா வரவேற்கிறார்.

# புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமை ஜனாதிபதி அகற்ற வேண்டுமாம்!

## கிழக்கு மகாண சிங்கள அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமை ஜனாதிபதி மீளக்கைப்பற்ற வேண்டுமென, கிழக்கு மாகாணச் சிங்கள அமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் அந்த அமைப்பு, பிரதமரின் தற்போதைய நடவடிக்கையால் புலிகள், கிழக்கு மாகாணத்துக்குள் ஊடுருவி, சகல இடங்களிலும் நிலைகொண்டுள்ளனர். இதனால், சிங்கள முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பற்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

எனவே - குரங்குபாஞ்சான் முகாம் மட்டுமல்லாது, புலிகளால் வேறிடங்களில் உருவாக்கப்பட்டுள்ள முகாம் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அசோக ஜெயவர்த்தனவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்தனவின் பதவிக்காலம் மேலும் மூன்று வருடங்கள் ஜனாதிபதியினால் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினத்துடன் இவரது பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், நேற்றைய தினம் இவரது பதவிக்காலத்தை ஜனாதிபதி மேலும் மூன்று வருடத்திற்கு நீடித்துள்ளார். நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் ஆளுநர் அசோக ஜெயவர்த்தன ஜனாதிபதியின் முன் பதவியேற்புக்கான சத்தியப்பிரமாணத்தை செய்துகொண்டார். (01)

# ஹெல்கிசன் தலைமையிலான தூதுக் குழு தலைவர் பிரபாகரனுடன் இரு மணிநேரம் பேச்சு

(கிளிநொச்சி)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினர், நேற்றுக்காலை கிளிநொச்சியில், தமிழீழத தேசியத்தலைவர் வே. பிரபாகரனைச சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கிளிநொச்சியிலுள்ள அரசியற்துறை நடுவப்பணியகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சட்ட ஆலோசகர் கலாநிதி உருத்திரகுமாரன் ஆகியோரும், நோர்வே தூதுக்குழுவின் தரப்பில் - பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மற் (10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனுடனான நேற்றைய சந்திப்பு ஆக்கபூர்வமானதாக அமைந்தது!

## ஹெல்கிசன் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் தலைவருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆக்கபூர்வமானதாக அமைந்தது. மிக விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர். எனினும் பேச்சுவார்த்தைகளை எப்போது ஆரம்பிப்பதென்பதற்கு திடமாக காலத்தினை குறிப்பிட முடியாது என, நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய பின்னர், நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் ஹெல்கிசன் இவ்வாறு தெரிவித்தார்.

தெற்கில் நடைபெற்று வரும் மாற்றங்கள் குறித்து ஹெல்கிசனிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது அவர்-

இது தென்னிலங்கையுடன் சம (10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தின் மீதிருந்த நம்பிக்கை அரசியல் குழப்பங்களால் சீர்குலைவு

## செய்தியாளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

**சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நோர்வேத் தூதுக்குழுவினர் நேற்றுக்காலை சந்தித்த பின்னர் இந்தச் சந்திப்பு குறித்து அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் முழு விபரம் வருமாறு:**



***இன்று நோர்வே தூதுக்குழுவிடம் முக்கியமாக எடுத்துக்கூறப்பட்ட விடயம் என்ன?***

சமாதானம் மீதான நம்பிக்கையிலும், அதனை முன்னெடுக்கும் நிலைப்பாட்டிலும், எமது அமைப்பு மிகவும் உறுதியாக இருக்கிறது என்பதை இன்று நோர்வே தரப்பிடம் எமது தலைவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

***தெற்கில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிகள் குறித்துப் புலிகளின் நிலைப்பாடு யாது?***

தெற்கிலே எழுந்துள்ள அரசியற் குழப்பத்தை, நீண்ட வரலாற்று உண்மையின் ஒரு தொடர்ச்சியாகவே நாங்கள் பார்க்கின்றோம். எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் எங்களுடைய மக்களின் எதிர்காலம், நலன் என்பவற்றில் நல்ல உறுதிப்பாட்டோடும், மிகத் தெளிவோடும் இருக்கிறோம்.

இன்று சமாதான முன்நகர்வுகள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புகின்ற சூழல் உருவாகிக்கொண்டிருக்கின்ற நிலையில், தென்னிலங்கையில் ஏற்பட்ட அதிகாரப்போட்டிகள், அதன் காரணமாக ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள் என்பன, எமது மக்கள் மத்தியில் சமாதானத்தின் மீது இருந்த நம்பிக்கையைச் சீர்குலைத்திருக்கிறது.

ஆகவே, எமது வடக்கு - கிழக்கு பிரதேசத்திலே நிலையான சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அதிகார இழுபறிப் போட்டி முடிவுக்கு வரவேண்டும். ஒரு உறுதியான அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டால், நாம் இந்தச் சமாதான நகர்வுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லலாம். இதனைத்தான் எமது தலைவர் நோர்வே அனுசரணையாளர்களுக்கு மிகத்தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார்.

***ஜனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வது தொடர்பான தங்கள் கருத்து?***

எங்களைப் பொறுத்தவரையில் இது சம்பந்தமாகக் கருத்துச் சொல்ல நாம் விரும்பவில்லை. தென்னிலங்கையில் ஒரு அதிகாரப் போட்டி நடந்து கொண்டிருக்கின்ற ஒரு சூழலில், இது சம்பந்தமான கருத்துக்களை நாம் கூறமுடியாது. மிகக் கவனமாகவும், உன்னிப்பாகவும் நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருக்கிறோம்.

தேவையேற்படும்போது, எங்களுடைய மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி, எமது தலைமை - சூழ்நிலைக்கேற்ப சரியான முடிவுகளை எடுக்குமென நான் நினைக்கின்றேன்.

***இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில், முக்கியமாக ஆராயப்பட்ட விடயங்கள் எவை?***

இன்று, முக்கியமாகத் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை, அதனால் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஏற்படப் போகின்ற பாதிப்புக்கள் என்பன சம்பந்தமாக ஆராயப்பட்டது.

மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக, எமது தலைவர் மிகவும் உறுதிப்பாட்டோடு இருக்கிறார். இதனையும் இன்று அவர் தெளிவுபடுத்தியிருந்தார். பேச்சுவார்த்தைகளின் மூலம், எமது மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய முயற்சியில், நாம் மிக உறுதிப்பாட்டோடும், அர்ப்பணிப்போடும் செயற்படுகின்றோம் என்பதை, இன்று எமது தலைவர் - நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாகச் சர்வதேச சமுகத்திற்குத் தெளிவாக்கியிருக்கிறார்.

அத்துடன், யுத்த நிறுத்த உடன்படிக்கை சம்பந்தமாக நீண்ட நேரம் பேசப்பட்டது. யுத்த நிறுத்த உடன்படிக்கைதான், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அத்திவாரமாக இருக்கிறது. இந்த விடயத்தில் நாம் உறுதிப்பாட்டோடு இருக்கும் பட்சத்தில்தான், சமாதான நடவடிக்கைகளை நாம் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லமுடியும்.

எனவே, யுத்தநிறுத்த உடன்பாடு தொடர்பான பல விளக்கங்களை நோர்வே தரப்பிடம் எமது தலைவர் கேட்டிருந்தார். ஏனெனில், யுத்த நிறுத்த உடன்பாடு தொடர்பான விடயங்களை இந்தச் சமாதான முயற்சியின் கண்காணிப்பாளர்கள் என்ற வகையில் நோர்வே அரசுதான் தரவேண்டும்.

இதன்போது, இன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியற்பணிகளை முன்னெடுத்துவரும் எமது போராளிகளின் பாதுகாப்புத் தொடர்பாகவும், தலைவர் பல விடயங்களை நோர்வேத் தரப்பிடம் கேட்டிருந்தார். இது சம்பந்தமாகக் கூடுதலாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

பொதுவாக, சமாதான முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள், அரசிடம் தாம் உறுதியாக இருக்கின்றோம் என்பதையும், யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாகக் குழப்பமில்லாது, நடைமுறைப்படுத்திச் செல்லும் உறுதிப்பாட்டோடும், எதிர்பார்ப்போடும் தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கின்றார்கள் என்பதையும் தலைவர் ஆணித்தரமாக இன்று தெளிவுபடுத்தியிருந்தார்.



***பிரதமர் பேச்சுவார்த்தையிலிருந்து விலகி ஜனாதிபதியிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதாகக் கூறுகிறார். இது தொடர்பான தங்கள் கருத்து என்ன?***

ஜனாதிபதியும், பிரதமரும் அமைச்சர்களும், பல அரசியற்கட்சிகளும் இன்று பல்வேறுவிதமான கருத்துக்களை வெளிப்படுத்திய வண்ணம் இருக்கிறார்கள். இதில், உண்மையான நிலைப்பாடு, கருத்துக்கள் என்பவற்றை அடிப்படையாக வைத்துத்தான் நாங்கள் ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியும். நாங்கள் யாரோடு பேசுவது? யார் சமாதான முன்னெடுப்புக்களைத் தொடர்ந்து முன்னெடுக்கப் போகிறார்கள். பூரண அதிகாரமுள்ள ஒரு சூழல் - அதாவது, அரசிடம் குழப்பங்கள் நீங்கி ஸ்திரமான அரசியல் தோன்றும்போதுதான் நாம் இது தொடர்பாகக் கருத்துக் கூற முடியும். இன்றும் நாம் மிக நிதானமாகவும் பொறுமையாகவும் ஒவ்வொரு விடயங்களையும் அவதானித்துக் கொண்டிருக்கிறோம். சூழ்நிலைகள் உறுதியாகும்போதுதான், இந்த விடயம் தொடர்பான எமது நிலைப்பாட்டைச் சொல்லமுடியும்.

***ஜனாதிபதி ஆட்சி அமைக்க முயன்று வருகிறார். இவ்வாறு ஆட்சி அமைத்தால் பேச்சுவார்த்தைகளை நடத்துவீர்களா?***

தற்போதுள்ள சூழலில் நாம் இது பற்றிக் கருத்துச் சொல்ல முடியாது. தென்னிலங்கையில் அரசியல் குழப்பங்கள் உள்ள இன்றைய சூழலில், எமது அமைப்பு ஒருபோதும் தெளிவான நிலைப்பாட்டை இந்தச் சூழலில் எடுக்காது. எதிர்காலத்தில் உருவாகும் நிலைப்பாடுகளைப் பொறுத்து நாம் இதுதொடர்பான முடிவுகளை எடுப்போம். ஆனால், சமாதானம் மூலமான தீர்விலேயே நாம் என்றும் உறுதியாக உள்ளோம். இதனையே எமது தலைவர் இன்று தெளிவுபடுத்தியிருந்தார்.

***ஒஸ்லோ பிரகடனத்திற்கு மேலாக தங்களுடைய இடைக்கால நிர்வாகசபை வரைபு அமைந்துள்ளதாக ஜனாதிபதி கூறுகிறார். இதுதொடர்பான தங்களுடைய கருத்து யாது?***

ஒஸ்லோ பிரகடனத்தில் அதிகார வரையறைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு, பிரகடனம் செய்யவில்லை. நாம் இன்று முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக வரைபை - எங்களுடைய மக்களின் இன்றைய தேவைகள், யதார்த்த நிலைகள், மக்களுடைய அபிலாஷைகள் என்பனவற்றை உள்ளடக்கிய நடைமுறைச் சாத்தியமான ஒரு வரைபாகவே சமர்ப்பித்துள்ளோம். இது தீர்வுக்கு ஏற்ற வகையிலும் அமைந்துள்ளது.

***சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள மந்தநிலை - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் அரசியல் நடவடிக்கைகளைப் பாதிக்குமா?***

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எமது அரசியல் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இன்றைய எமது சந்திப்பின்போது எமது தலைவர் இந்த விடயம் தொடர்பான உத்தரவாதத்தைத் தான் நோர்வேத் தரப்பிடம் கேட்டிருந்தார்.

அதாவது யுத்தநிறுத்த உடன்பாடு எந்தளவு வலுவாக இருக்கிறது? கண்காணிப்புக் குழு எவ்வளவு அதிகாரத்தோடு இருக்கின்றது? இதற்கான உத்தரவாதங்கள் பல தரப்புக்களிடம் இருந்தும் உங்களுக்கு கிடைத்திருக்கிறதா? என தலைவர் வினாவினார்.

நோர்வேத்தரப்பு இது தொடர்பாக உத்தரவாதம் அளிக்கும் போதுதான் எமது போராளிகள் தமது பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், எமது போராளிகள் அரசியல் பணிகளை முன்னெடுப்பது என்பது யுத்தநிறுத்த உடன்பாட்டின் முக்கிய கருத்தாக உள்ளது. அந்த வகையில் இதற்கான உத்தரவாதத்தை நோர்வேத் தரப்பிடம் கேட்டோம். அவர்கள் தமக்கு அது தொடர்பாக சகல தரப்பாலும் உறுதி தரப்பட்டதாகவும், எனவே தாம் இது தொடர்பாக உறுதிப்பாட்டை தரமுடியும் எனவும் தெரிவித்தார்கள். அந்த வகையில் வழமை போலவே இராணுவக்கட்டுப்பாட்டுப் பிர தேசங்களில் எமது அரசியல் நடவடிக்கைகள் தொடரும்.

***போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள், கடமைகள் தொடர்பாக இன்று பேசப்பட்டதா?***

இது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விடயமாகும். யுத்த நிறுத்த உடன்படிக்கை எமது தலைவராலும் அரசாங்கத்தினாலும் கைச்சாத்திடப்பட்டு இன்று செம்மையாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்கள், கடமைகள் என்பன ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதொன்று. அதிலே மாற்றம் செய்வது தொடர்பான கருத்துக்கள் இன்று பரிமாறப்படவில்லை.

***ஆனால், இது விடயம் தொடர்பாக ஜனாதிபதி தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளதே...?***

ஜனாதிபதியிடம் இருந்து வரும் கருத்துக்கள், அவரால் வெளியிடப்படும் அறிக்கைகள் நாளாந்தம் முரண்பட்ட வண்ணமுள்ளவை. இதற்கு விளக்கமளித்தால் நாமே குழப்பமடைந்து விடுவோம். எனவே, இந்த நிலையில் ஜனாதிபதியினுடைய அதிகாரபூர்வமான கருத்தாக எதனை எடுப்பது என்பதிலே எங்களுக்கு ஒரு குழப்பம் இருக்கிறது. இந்த நிலையில் நோர்வே தரப்பு இது தொடர்பான கருத்து எவற்றையும் எம்மிடம் முன்வைக்கவில்லை. இதனால் இது தொடர்பாக பேசவேண்டிய தேவை எமக்கு ஏற்படவில்லை.

***அரசியல் சிக்கல்களைத் தாண்டி சமாதானம் முன்னெடுக்கப்படும் என்பதில் விடுதலைப்புலிகளுக்கு எந்தளவு நம்பிக்கை உள்ளது?***

விடுதலைப்புலிகளுக்கு இது தொடர்பாக இருக்கும் நம்பிக்கை என்பதைவிட அவர்களுக்கு சமாதானம் என்பது முக்கியமான தேவையாக இருக்கின்றது. எமது மக்களுடைய அரசியல் அபிலாஷைகளுக்கு சரியான தீர்வை எட்டவேண்டியுள்ளது.

அரசியல் இழுபறிகளும் குழப்பங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் போது, நம்பிக்கை என்பது தொடர்பாக எந்தக் கருத்தையும் வெளிப்படுத்த எம்மால் முடியாதுள்ளது. உறுதியான அரசியல் நிலைமை ஏற்படும்போது நம்பிக்கை தொடர்பான எமது கருத்தை முன்வைக்கமுடியும்.

***உடனடியாக ஒரு பொதுத்தேர்தல் உருவானால் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கும்?***

பொதுத்தேர்தல் ஒன்று ஏற்படுமாக இருந்தால், அது தொடர்பாக எமது தலைமைப்பீடம் மிகவும் உன்னிப்பாகவும் அவதானமாகவும் பரிசீலனை செய்யும். பரிசீலனை செய்து அந்த நேரத்தில் நாம் எமது நிலைப்பாட்டையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவோம்.

***பொதுத்தேர்தல் ஒன்றை விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கிறார்களா?***

தென்னிலங்கை அரசியல் சூழ்நிலைகள், இனிவரும் காலங்களில் என்ன திசையில் செல்லும் என்பது தொடர்பாக கருத்து வெளியிடுவதை விடுதலைப் புலிகள் தவிர்த்து வருகிறார்கள். அந்த வகையில் இதற்கான பதிலைக்கூற நான் விரும்புவதில்லை.

***இனிவரும் பேச்சுவார்த்தைகள் தங்கள் தலைமையில் நடைபெறுமா? அல்லது அன்ரன் பாலசிங்கம் இணைந்து கொள்வாரா?***

அவருடைய உடல்நிலை சீராகும் நிலையில் நிச்சயமாக அவர் பேச்சுவார்த்தைகளில் இணைந்து கொள்வார். பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கும் நேரத்தில் அவருடைய உடல்நிலையை கருத்தில் கொண்டு, எமது தலைமை தீர்க்கமான முடிவை எடுக்கும் என நான் நம்புகிறேன்.

***தென்னிலங்கை அரசியல் நிலை தொடர்பாக குழம்பிப்போயுள்ள தமிழ் மக்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?***

தமிழ் மக்களுக்கு மிகத் தெளிவாக ஒரு விடயத்தைச் சொல்லலாம். இந்த விடயத்தை தலைவரும் இன்று நோர்வேத் தரப்பிடம் கூறியுள்ளார். யுத்தம் எம்மீது திணிக்கப்படும் நிலைவரும் வரை, நாம் யுத்த நிறுத்தத்தை செம்மையாக கடைப்பிடிப்போம் இது உறுதி. யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் எம்மால் எதுவுமே செய்யமுடியாது. யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிப்பதிலேயே ஆர்வமாக உள்ளோம்.

***கொழும்பில் ஸ்திரத்தன்மை ஏற்படுவதற்கு எவ்வளவு நாட்கள் தாங்கள் பொறுத்திருப்பீர்கள்?***

நாம் யுத்தத்தை விரும்பவில்லை. அமைதியை - சமாதான வழியில், பேச்சுக்கள் மூலமாக, எமது மக்களுடைய அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வையே நாம் வேண்டி நிற்கிறோம்.

தென்னிலங்கை அரசியல் நிலை நாளுக்கு நாள் மாறிவருகிறது. தேசிய அரசு, தேசிய நல்லிணக்க அரசு போன்ற பலவிதமான கருத்துக்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, கொழும்பிலே சரியான அரசியல் நிலை ஏற்படாத நிலையில் நாம் கருத்துக்களைக் கூறி நிலைமையை மேலும் மோசமடையச் செய்ய விரும்பவில்லை.

எம்மைப் பொறுத்த வரையில் சமாதான வழியில் பேசித் தீர்வுக்காண யார் உறுதிப்பாட்டோடு இருக்கிறார்களோ அவர்களோடு

(09 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் கேட்பது சமஷ்டி ஆட்சியல்ல இலங்கைத் தீவுக்குள் இன்னுமொரு தீவையே!

## ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவிப்பு



இந்த நாட்டின் வரலாற்றில் தமிழர்களுக்கு என்றொரு கலாசாரம் எப்போதுமே இருந்ததில்லை. வெள்ளையர்கள் - தென்னிந்தியாவிலிருந்து தமிழர்களை இறக்குமதி செய்தபின்னர் தான், அப்படியொரு கலாசாரம் இந்த நாட்டில் ஆரம்பித்தது என ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இந்த நிலையில், தாயகப்பிரதேசம் என்ற புதிய கோட்பாட்டை உருவாக்கிக்கொண்டு, அதைத் தமகயேயுரியதாக ஆக்கித்தரவேண்டும் என்று, போராட்டம் நடத்துவதும், அந்தக் கோரிக்கைக்கு விட்டுக் கொடுத்து, அதற்குச் சாதகமான நடைமுறைகளை மேற்கொள்ள அரசாங்கம் பகீரதப்பிரயத்தனம் செய்வதும், கேலிக்கூத்தாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்தவாரம் மாத்தளை நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

புலிகளை மண்டியிடவைத்து, இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியும். ஆனால், இப்போது தீர்க்க முடியாத ஒரு பிரச்சினையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தி விட்டுள்ளார். நாட்டுப்பற்றும், இன உணர்வுமில்லாத ஒரு சுயநலத் தலைவனே ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

கடந்த இரு ஆண்டு காலத்தில், புலிகள் தமது படைப்பலத்தை வலுப்பெறச்செய்துகொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் பிரதமர் ரணில்.

இப்போது சமஷ்டி என்ற தற்கொலைக் குண்டை வயிற்றில் கட்டிக் கொண்டும், சமாதானம் என்ற சயனைட் வில்லையைக் கழுத்திற் தொங்கவிட்டுக்கொண்டும் - புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தயாராகியுள்ளனர்.

புலிகள் கேட்பது சமஷ்டி ஆட்சியல்ல, இலங்கைத்தீவுக்குள் இன்னொரு தீவாகவிருக்கும் ஒரு பிரதேசத்தையே அவர்கள் சொந்தமாகக் கேட்கின்றனர். நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஒரு தனியாட்சி அமைப்பை, புலிகள் சமர்ப்பித்துள்ள அமைப்பு வரைவின் ஒவ்வொரு சொலலிலும் தொக்கிநிற்கின்றது. இதற்கு உலகின் பிற்போக்குவாத சக்திகள்- அமெரிக்காவினதும், நோர்வேயினதும் தலைமையில் துணைநிற்கின்றன.

அமெரிக்காவினதும், நோர்வேயினதும் ஊதுகுழலாகவே ரணில் விக்கிரமசிங்க தற்போது மாறியிருக்கிறார். இந்த நாட்டில் ஏற்படும் எந்தப் பிரச்சினைக்கும் - நோர்வேயையும அமெரிக்காவையும் கேட்டே பதில்சொல்ல வேண்டியளவிற்குக் கைப்பொம்மையாகியுள்ள ரணிலின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் இடமளித்தால், நாடு மீண்டும் அடிமைப்பட்டு அல்லலுறுவதைத் தவிர்க்கமுடியாமல் போய்விடும்.

எமது நாட்டின் நீர்வளங்கள் , இயற்கை வளங்கள் மற்றும் ஏராளமான நிறுவனங்கள் படிப்படியாகப் பிறநாட்டவருக்குச் சொந்தமாக மாறிக்கொண்டு வருகின்றது. இதன் அடுத்த உச்சக்கட்ட அம்சமாகத்தான் சந்திரிகாவும், ரணிலும் ஒன்று சேர்ந்து, சமாதானம் என்ற பெயரில் எடுக்கப் போகும் நடவடிக்கை இருக்கப்போகின்றதா? அவற்றை மக்கள் சிந்திக்கவேண்டும்.

சமாதானம் என்று இப்போது பேசபட்டு வருவது, கழுத்தில் தொங்கும் சயனைட் குப்பிதான் என்ற உண்மையை மக்கள் மறந்துவிடக்கூடாது. புலிகள் கேட்கும் அதிகாரப்பகிர்வு என்பது - தனி ஈழம் என்பதன் மாற்றுப்பெயர்தான் என்பதை மக்கள் உணரவேண்டும். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### திருக்கேதீஸ்வரத்தில் 55 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

1990 ஆண்டுக்கு முன்னர், நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் இடம் பெயர்ந்து, திருக்கேதீஸ்வரத்தில் வாழ்ந்துவரும் 55 குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மீளக்குடியமரும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 25,000 ரூபாவும், தற்காலிகக் கொட்டகை அமைப்பதற்கு 7000 ரூபாவும் கொடுக்கப்படவுள்ளது. மேலும் இவர்களுக்கு 6 மாதத்திற்கான உலர் உணவும் வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (201)

### பிக்குமாரின் அதியுயர்பீடம் அமைப்பு

இலங்கையில் பதவிக்கு வரும் அரசாங்கத்திற்கு ஆலோசனை மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், பௌத்த பிக்குமாரின் அதியுயர்பீடமொன்று அமைக்கப்படவுள்ளது. நேற்றுமுன்தினம் கண்டி தலதா மாளிகை அருகில் இந்தச் சபை அமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த சபை எல்லாவெல தேரரின் ஆலோசனைப்படியே அமைக்கப்பட்டுள்ளது. (01)

# அரசியல் நெருக்கடி நிலைமைகள் குறித்து சமயத்தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு!

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து, அனைத்து சமயத்தலைவர்களுடனும் ஜனாதிபதி சந்திரிகா கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தக் கலந்துரையாடலின் முதற்கட்டமாக, நேற்றுமுன்தினம் மகா சங்கத்தினருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், மூன்று அமைச்சர்களின் பதவிநீக்கம் செய்தது குறித்து, தனது பக்க நியாயங்களைச் சமயத்தலைவர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி மேற்கொண்ட இந்த முடிவு நாட்டுக்கு, தான்செய்த கடமை எனவும், ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

தற்போதய பிரச்சினைகளை நீக்குவதற்கு, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனைத்து மக்களும் ஆதரவு அளிக்கவேண்டும் என்று மகா சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# பாதுகாப்பு அமைச்சை ஒருபோதும் அரசாங்கத்திடம் கொடுக்கமுடியாது

## சரத் அமுனுகம தெரிவிப்பு

ஜனாதிபதியினால் பொறுப்பேற்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சு எக்காரணம் கொண்டும் ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் மீள ஒப்படைக்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம.

நேற்றையதினம் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே, அமுனுகம மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

ஜனாதிபதினால் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் - எக்காரணம் கொண்டும் கூட்டப்படமாட்டாது. அப்படிக் கூட்டுவதாக இருந்தால் அது அரசியல் யாப்பிற்கு முரணானதாகும்.

பாதுகாப்பு தொடர்பான அதிகாரங்கள் அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதியிடமே இருக்கவேண்டுமென, உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், அது ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் இருந்தாலும் பிரயோசனமற்றது.

ஜனாதிபதியின் தொலைபேசி உரையாடல்களை, ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஒட்டுக்கேட்டு வந்துள்ளது. பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பெடுத்ததும் அந்த ஒட்டுக்கேட்கும் சாதனங்களைப் பிரித்துவிடுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் எனவும் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

### எரிபொருள் விலை அதிகரிப்பு

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலை, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டிருப்பதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. பெற்றோலின் விலை ஒரு ரூபாவினாலும், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பனவற்றின் விலை 50 சதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# மாகாணசபைக் கூட்டத்தில் சண்டையிட்ட உறுப்பினர்கள்

மத்திய மாகாணசபைக் கூட்டத்தில் - ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும், பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரும் மோதலில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

மத்திய மாகாணசபை வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதம் நடந்தது. இதன்போது, ஐ.தே.க. மாகாணசபை உறுப்பினர் மகிந்த விஜேசேகர, பொ.ஐ.மு. மாகாணசபை உறுப்பினர் அநுரா பெர்னாணடோ ஆகிய இருவருமே சபைக்கூட்டத்திற்குப் பாய்ந்துவந்து சண்டையிட்டனர்.

இத்தகையதொரு சம்பவம் மத்திய மாகாணசபையில் நடைபெற்றது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மத்திய மாகாணசபையின் வரவு - செலவுத்திட்டம் ஐ.தே.கவினால் எட்டு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.



நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கச் சென்ற நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசனை ஜனாதிபதி கைலாகு கொடுத்து வரவேற்பதையும், அவர் தலைமையிலான குழுவினருடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதனையும் படத்தில் காணலாம்.

# முஸ்லிம் பிரதிநிதிகளையும் மூன்றாம் தரப்பாக்கி பேச்சில் இணைப்பது நோர்வே அரசின் பொறுப்பு!

## அமைச்சர் ஹக்கீம் வலியுறுத்து

முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாகப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்கு, நோர்வே சமாதான முயற்சியாளர்களே பெறுப்பாக இருக்கவேண்டுமென, முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள முஸ்லிம் காங்கிரஸின் தலைமைச்செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், மற்றும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரைச் சந்தித்தபோதே, அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதிக்கும், தற்போதைய அரசாங்கத்திற்கும் இடையிலான குழப்பசூழ்நிலையைச் சீர்செய்வதற்கான முயற்சியில் நாமும் ஒத்துழைக்கின்றோம்.

எமது தனித்தரப்பினை நோர்வே வலியுறுத்தவேண்டும். விடுதலைப் புலிகளுடன் இது குறித்துப் பேசுவதற்காக, விரைவில் அவர்களுடன் சந்திப்பொன்றை நடத்தவுள்ளோம்.

முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு நிராகரிக்கப்பட்டால், அது முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் துரோகமாக அமையும்

தேர்தல் ஒன்று வருமேயானால், அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உரமானியத்தை அதிகரிக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது

## எஸ்.பி.திஸநாயக்க தெரிவிப்பு

உரமானியத்தின் விலை 2 ஆயிரத்து 100 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. அரசின் புதிய வரவு செலவுத்திட்டத்தின் மூலம் இந்த விலை அதிகரிப்பு இடம்பெறவிருப்பதாக, அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி உரமானியத்தின் விலை 8 ஆயிரத்து 200 ரூபாவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விவசாயப் பயிர்ச்செய்கையானது 9 சதவீதத்தால் அதிகரித்திருப்பதால், தனியார் துறையில் அதன் பங்கையும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டே, இந்த விலை அதிகரிப்பு அறிவிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பொதுஜன ஐக்கிய முன்னணியில்

# தேசியப் பட்டியல் நியமனத்தினை ரத்துசெய்ய கோரும் மனு வாபஸ்

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலிலுள்ள 11 நாடாளமன்ற உறுப்பினர்களின் நியமனங்களை ரத்துச் செய்யக் கோரி, லங்கா சமசமாயக் கட்சியின் செயலாளர் பட்டி வீரக்கோனால் தொடுக்கப்பட்ட வழக்கு ரத்துச் செய்யப்பட்டது.

20001 ஆம் ஆண்டு தேர்தலின் பின், லங்கா சமசமாயக் கட்சிக்கு தேசியப் பட்டியலில் ஒரு உறுப்பினர் பதவி வழங்குவதாக பொதுசன ஐக்கிய முன்னணி வாக்குறுதியளித்தபோதும், அது வழங்கப்படாததன் காரணமாகவே பட்டி வீரக்கோனால் இந்த வழக்குத் தொடுக்கப்பட்டது.

மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவினர் இந்த வழக்கை விசாரித்து வரும்வேளையில், இந்த வழக்கு ஐந்து நீதிபதிகள் கொண்ட குழுவால் விசாரிக்கப்படவேண்டுமென்று பொதுஜன ஐக்கிய முன்னணியால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இரண்டு வருடங்களாக விசாரணை நடைபெற்ற வரும் இந்த வழக்கு, மேலும் ஐந்து நீதிபதிகள் கொண்ட குழுவால் விசாரிப்பதற்கு மேலும் காலதாமதமாகலாம் என்று நீதிமன்றில் தெரிவித்து, தாம் வழக்கை வாபஸ் பெறுவதாக பட்டி வீரக்கோன் தெரிவித்ததையடுத்தே, இந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது.





ஐரோப்பிய ஒன்றியத்தால், யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக ஆராயவந்த ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் - யாழ்.செயலக அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம்.

### யாழ்.வந்த ஐரோப்பிய பிரதிநிதிகள்

# அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அரச அதிபருடன் கலந்துரையாடினர்

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய ஒன்றியத்தால் யாழ். மாவட்டத்தில் அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக, ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் குழுவொன்று நேற்றுமுன்தினம் அரச அதிபருடனும் மற்றும் பல அரச அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

மனிதாபிமான உதவிகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தென்னாசிய அலுவலகத் தலைவர் கிறிஸ்றியன் மனிரா, உலக உணவுத் திட்டத்தின் அவசர தேவைகளுக்கான இணைப்பாளர் றீன் மைக்கல் ஆர்னல்ட் ஆகியோர் அடங்கிய குழுவே, நேற்றுமுன்தினம் மாவட்ட செயலகத்தில் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியது.

இதன் போது ஐரோப்பிய ஒன்றியத்தினால் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் பல அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும், அவற்றின் முன்னேற்றம், வெற்றி என்பன தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இந்தப் போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள எமது பிரதேசத்திற்கு இத்தகைய உதவிகள் அவசியமானவையெனவும், அவை உரிய முறையிலே செயற்படுத்தப்படும்போதுதான் மக்களுக்கு நன்மை கிட்டும் எனவும், அரச அதிகாரிகள் எடுத்துக் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிநிற்கவுள்ள இந்தக் குழுவினர் -

ஐரோப்பிய ஒன்றிய திட்டங்கள் அமுல்படுத்தப்படும் பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிடவுள்ளனர். திட்டங்கள் தொடர்பாக பொதுமக்களிடமும் இவர்கள் கருத்துக்களைக் கேட்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## ஓட்டோ தடம் புரண்டத்தில் சாரதி காயம்

வேகமாக வந்த ஒட்டோ தடம் புரண்டதில், ஓட்டோசாரதி படு காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை ஊரெழுவில் இடம் பெற்றது.

வேகமாக வந்து கொண்டிருந்த ஓட்டோவினது கைப்பிடிக்குள் ஓட்டோ றேடியோவயர் சிக்குண்டுள்ளது. இதனால், நிலைதடுமாறி ஓட்டோ மின்கம்பம் ஒன்றுடன் மோதியதில் தலைகீழாக புரண்டது.

ஓட்டோ சாரதியான ஊரெழுவைச் சேர்ந்த கே.ரூபன் (வயது 32) என்பவர் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தார். (44)

## மணல்மண் தட்டுப்பாட்டினால் மின்சார சபை பணிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மணல் இன்மையால் மின்கம்பங்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்படுவதால் மின்சாரசபையின் நடவடிக்கைகள் பல முடங்கியுள்ளன என இலங்கை மின்சாரசபையின் யாழ். பிராந்திய அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.நகரப்பகுதி உட்பட பல பகுதிகளிலும் - வீடுகள், வீதிகள் முதலானவற்றிற்கு மின் இணைப்புக்கள் வழங்கப்படாமை குறித்துக் கேட்கப்பட்ட போதே, மின்சாரசபை வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்தன.

இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

எமக்கு மின்கம்பங்களை உற்பததி செய்து தரும் ஒப்பந்தகாரர்கள், மணல் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிரமத்தால் அவற்றை உற்பத்தி செய்து தருவதற்குப் பின்னடிக்கிறார்கள்.

இதனால், எம்மால் மின் இணைப்பு வேலைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ள முடியாதநிலை உருவாகியுள்ளது. எனத் தெரிவித்தனர்.

இது குறித்து இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்தியக் கிளையினரிடம் விசாரித்த போது, தம்மால் உற்பத்தி செய்யப்படும் மின்கம்பங்களை மினசார சபையினர் கொள்வனவு செய்யப் பின்னடிப்பதாகவும், தம்மால் தேவையான மின்கம்பங்களை வழங்க முடியும் எனவும் தெரிவித்தனர்.

மணல் பெறுவதிலுள்ள சிக்கல் குறித்து யாழ்.மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் பி.சுந்தரம்பிள்ளையிடம் கேட்டபோது - தற்போது மணல் அள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் பெருமளவிற்கு சிரமம் இருப்பதாகத் தான் கருதவில்லை எனவும் தெரிவித்தார். (ப)

### சட்டவிரோதமான முறையில்

# திணைக்களங்களுக்கு சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்தத் தடை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் - அரச திணைக்களங்களுக்கு சொந்தமான வாகனங்கள் பயன்படுத்தப்படுவதற்கு எதிராக பொலிஸாரால் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் இயங்கிவரும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் பற்றிய விபரங்களும், அந்த வாகனம் யாருடைய பாவனையிலுள்ளது என்ற விபரங்களும், பொலிஸாரால திரட்டப்படுகின்றது. உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களுக்கு நேரில் சென்று, இது தொடர்பான தகவல்களை அந்தப்பகுதி பொலிஸ் அதிகாரிகள் திரட்டி வருகின்றனர்.

குறித்த அரச வாகனங்கள் தவறான வகைகளில் பாவிக்கப்படுவதனை மட்டுப்படுத்தவே, தாம் இந்த விபரங்களைத் திரட்டுவதாக, பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. குடாநாட்டிலுள்ள உள்ளூராட்சி அமைப்புக்களின் பதவிக்காலம் முடிவுறுத்தப்பட்டபோதும், பிரதேசசபைக்கு சொந்தமான சில பிக்கப் வாகனங்களை, அப்போது அதிகாரத்தியிலிருந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இது வரை கையளிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக, அந்தப் பிரதேசசபைகளின் செயலாளர்கள் - பிரதேச பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைச் செய்திருந்தபோதிலும், அதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி கரையோரப்பகுதிக்கு பொறியியலாளர் குழு விஜயம்

வடமராட்சியின் கரையோரப் பகுதியில் அமைந்த 27 மீன்பிடி இறங்குதுறைகளை ஆழப்படுத்துமாறு - பிரதமர் அலுவலகத்தின் பணிப்பின் பேரில், கரையோர வளங்கள் பேணல திணைக்களத்தைச சேர்ந்த பொறியியலாளர் குழு நேற்றுமுன் தினம் அந்தப்பகுதிக்கு விஜயம் செய்துள்ளது.

பருத்தித்துறை முனைப்பகுதி முதல் தொண்டமனாறு வரையிலான கரையோரப்பகுதிகளில் அமைந்துள்ள மீன்பிடி இறங்குதுறைகளை ஆழப்படுத்துமாறு - மீனவ சங்கங்கள கோரிவந்தன. இதற்கு இராணுவத்தினர் - பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து, இந்த மீன்பிடி இறங்குதுறையை ஆழப்படுத்த மறுத்து வந்தனர். தற்போது கரையோரக் கடலரிப்பைக் காரணங்காட்டி இதற்கு அனுமதியளித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே பிரதமர் அலுவலகத்தின் பணிப்புரைக்கு அமைவாக - கரையோர வளம் பேணல் திணைக்களத்தைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் உட்பட, பிரதிநிதிகள் குழுவொன்று அந்தப்பகுதிக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது. இவர்களுடன் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறையின் யாழ். அலுவலக அதிகாரிகள், வடமராட்சி மீனவசங்கப் பிரதிநிதிகளும் சென்றிருந்தனர்.

இதன்போது - கரையோர மீன்பிடி இறங்குதுறைகளை ஆழப்படுத்துவதன்மூலம், கரையோரப் பாதுகாப்பிற்கு எந்தவித அபாயமும் இல்லையெனவும், இறங்குதுறைகளை ஆழப்படுத்துவது தொடர்பான சிபாரிசுகள் அடங்கிய அறிக்கையினை விரைவில் பிரதமர் அலுவலகத்திடம் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். (202)

## கிராம அலுவலர்களுக்கான இரு நாள் பயிற்சிப்பட்டறை

யாழ்.மாவட்ட கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான இருநாள் பயிற்சிப்பட்டறை - எதிர்வரும் 19ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யூ.என்.எச்.சி.ஆரின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப்பட்டறையில் -

"கிராம அலுவலகக் கடமைகளும் அலுவலக முகாமைத்துவமும்" எனும் விடயம் தொடர்பாக - வீரகத்திப்பிள்ளையும், மீள்குடியேற்றமும் புனர்வாழ்வும், புனரமைப்பும் எனும் விடயம் தொடர்பாக - பு.சுந்தராம்பாளும், கிராம அபிவிருத்திச் செயற்பாடுகள் எனும் விடயம் தொடர்பாக - பா.திலகநாயகம் போலும், பிரதேச மூலவளங்களை இனங்காணுதலும், மதிப்பீடு செய்தலும் எனும் விடயம் தொடர்பாக - நா.சிவபாதசுந்தமும், நுண்கருத் திட்டங்களை இனங்காணல் எனும் தலைப்பில் - ந.சத்தியமூர்த்தியும், முதல் நாள் பயிற்சிப் பட்டறையில் உரையாற்றவுள்ளனர்.

மறுநாள் நடைபெறும் பயிற்சிப் பட்டறையில் -

'திட்டங்களை அமுல்படுத்தலும் கண்காணித்தலும் ' எனும் விடயம் தொடர்பாக - கா.பாலகிருஷ்ணன், சட்டமுறையிலான பணிகளும், சட்ட முறை ஒழுங்கு பேணலும் எனும் விடயம் தொடர்பாக- செ.பத்மநாதன், பாதிக்கப்பட்ட மக்களின் உளவியல் பங்கும் வலுவூட்டலும் எனும் விடயம் தொடர்பாக - ந.றஞ்சிதமலர் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ம)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

பெயர் : ர.தேனுஜா
முகவரி : வெள்ளம் போக்கட்டி, கொடிகாமம்.





இரண்டாவது அகவையில்

பெயர் :பா.பானுஜா
முகவரி :கரம்மைப்குறிச்சி கிழக்கு, வரணி.

எட்டாவது அகவையில்

பெயர் : வி.வீனா
முகவரி : கசல், ஜெர்மனி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------------
பெற்றார் ஒப்பம்

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.









*கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படக்கூடிய மிகைவாந்தி, அதனால் ஏற்படும் உடல் உபாதைகள், குறைப்பிரசவத்தில் குழந்தை பிறந்தால் அதை எப்படிப் பாதுகாப்பது பற்றியும், என்னுடைய கொடுமையான அனுபவங்கள் பற்றியும் சகோதரிகளோடு அவற்றைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.*

**எனக்குக் குழந்தை வயிற்றில் உருவானதிலிருந்து ஒரேவாந்தி. எது சாப்பிட்டாலும் அது மறுநிமிடம் வாந்தியாகவரும். வைத்தியரிடம் கேட்டால், "உனக்குப் பிடித்ததைச் சாப்பிடு, இதற்கு மருந்து கிடையாது" என்பார். இதனால், ஏற்பட்ட பாதிப்புக்கள் நிறைய. தோல் வறண்டு, சுருங்கி, கறுத்து விடும். நீர்ச்சக்தி உடலில் இல்லாமை, உடல் நிறை குறைதல், குழந்தை சரியான வளர்ச்சியின்மை ஆகியவையாகும். இதனால், பிரசவம்வரை சிக்கல் தொடரும்.**

**கர்ப்பிணிப் பெண்கள்- தங்கள் உணவைக் கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிடவேண்டும். வாந்தி எடுத்தால், அவசியம் வைத்தியரை அணுகி அவர் தரும் மருந்துகளைக் குடிக்கவேண்டும். எனக்கு 5 மாதம்வரை மிகைவாந்தியில் - 45 கிலோவிலிருந்து 44, 43 என்று நிறை குறைந்து, படாதபாடுபட்டு, பின்பு 49 கிலோ நிறைக்கு வந்தேன். 6,7,8 மாதங்களில் 58 கிலோவிற்கு நிறைகூடியது. 8 ஆம் மாதத் தொடக்கத்தில் ஒரு நாள் லேசான வயிற்றுவலி தொடர்ந்து வந்தது.**

**மறுநாள் வைத்தியரிடம் - பரிசோதித்தபோது, இன்னும் அரை மணி நேரத்தில் பிரசவம் ஆகிவிடலாம் எனக் கூறிவிட்டார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. எனக்கு 8 மாதம் தானே ஆகிறது? அதற்குள் என்ன ஆயிற்று. சரி ஆண்டவன் விட்ட வழி என்று இருந்தேன். சாதாரண பிரசவம்தான். பெண் குழந்தை பிறந்தது. இதுவரையில் நாங்கள் இந்த குறைப் பிரசவத்தைப் பற்றி பெரிதாக பயப்படவில்லை. இதற்கு மேல் தான் ஆரம்பமானது, குழந்தை பற்றிய பிரச்சினை. குழந்தை 2 கிலோவாக இருந்ததால், வைத்தியர் - குழந்தையை துப்பரவு செய்யவேண்டாம் என்று கூறி, பாதுகாப்பறையில் வைத்துவிட்டனர். நானோ மேல் மாடியில். குழந்தை கீழே என் அம்மாவின் கண்காணிப்பில் இருந்தாள். குழந்தைக்கு 36.5 டிகிரி வெப்பந்தான் இருக்கவேண்டும், இதற்கு மேல் 39,40 என்று ஆனால், வைத்தியரை உடனடியாக அணுக வேண்டும். குழந்தைக்கு திடீரென்று வெப்பம் உயர்ந்துவிட்டது. குழந்தை 'வீல்' என்று அழவும், என் அம்மா பயந்து போய் வைத்தியரை அணுக அவர் வந்து உடனே சரி செய்தார். இரவு 8 மணிக்கு குழந்தையை என்னிடம் கொண்டு வந்தார்கள்.**

(தொடரும்...)

# தாய்ப்பால் முதல் முதலுதவி வரை

# எக்காலத்திலும் எந்நேரத்திலும் கைகொடுப்பது சிறுகைத்தொழிலே

**சாவற்கட்டுச் சந்தைக்கு அண்மையிலுள்ள ஒரு வீட்டில் சிறுகைத்தொழில் முயற்சியாகப் பீடிசுற்றும் தொழிலை மேற்கொண்டு வரும் சில பெண்களைச் சந்தித்தபோது, அவர்களுடன் நாம் பகிர்ந்துகொண்ட இக்கைத்தொழில் பற்றிய அனுபவத்தையும், கருத்துக்களையும் தருகிறோம்.**

சாவற்காட்டுச் சந்தைக்கு அண்மையிலுள்ள ஒரு வீட்டில், சிறு கைத்தொழில் முயற்சியாகப் பீடிக் கைத்தொழிலை மேற்கொண்டுவரும் பெண்கள் குழுவினரைச் சந்தித்தோம். எங்களைப பற்றியதான சிறு அறிமுகத்துடன், அவர்களுடன் எமது செவ்வியை ஆரம்பிக்க முன்னர், இந்த பீடிக்கைத்தொழில் சார்பான சிறு அறிமுகத்துடன், எமது கேள்விகளை ஆரம்பித்தோம்.

சாவற்கட்டு கிராமத்தில் பல இடங்களில் சிறு,சிறு குழுக்களாப் பீடிக்கைத்தொழிலை மேற்கொண்டு வருகினறது. பீடி உற்பத்திச் செயற்பாடுகளில் - முடிவுப்பொருள் வரை இவர்களது செயற்பாடுகள் இடம் பெறுவதில்லை. இருந்தபோதும், இந்த உற்பத்திச் செயற்பாட்டிற்கு இவர்கள் பெரும் பாங்காற்றி வருகினறனர். குறிப்பிட்டளவு இலையுடன், தேவையான ஏனைய மூலப்பொருட்களையும் கொடுத்து, 12 பீடிகளை உள்ளடக்கியதான ஒரு கட்டாக வடிவமைத்து, முகவர்களிடம் கையளிப்பதுடன் இவர்களது பணி முடிவடைகிறது. இதற்குப் பின்னரே விளம்பரச் சுருள் ஒட்டப்பட்டு, ஒவ்வொரு கட்டுக்களை இணைத்துப் பண்டலாக்கி (20,40 கட்டுக்களைக் கொண்டது) இறுதி முடிவுப்பொருளாக விநியோகத்திற்கான வடிவம் பெறுகிறது.

இந்தக் கைத்தொழில் முயற்சியில் நீண்டகாலமாகச் செயற்பட்டு வருபவர்களான நிஷா, கலா, வாணி, அதிசா ஆகியோர்களுடனான கருத்துப் பகிர்வு -

**இக்கைத்தொழிலை நீங்கள் எவ்வாறு தெரிவுசெய்தீர்கள் எனக் கூறமுடியுமா?**

நாங்கள் அறிந்த காலத்தில் இருந்தே எமது பிரதேசத்தில் பீடி சுற்றும் செயற்பாடு இடம்பெற்றது, இன்றும் தொடர்ந்து வருகிறது. இதனால் ஏற்பட்ட பரிச்சயத்துடன், நாங்கள் எல்லோரும் 1997, 1998 காலப் பகுதியில் பீடி சுற்ற ஆரம்பித்தோம். இந்தக் காலப்பகுதியில் நாட்டில்

இந்த வேலை செய்து வருகின்றேன். எனது தாயாரும் பீடி சுற்றும் வேலையை நீண்டகாலமாக மேற்கொண்டுள்ளார். நான் ஒரு நாளைக்கு 2000 பீடி சுற்றுவேன். இந்த 2000 பீடிக்கும் 800 கிராம் புகையிலைத் தூளும், 600 கிராம் இலையும் தேவை. 1000 பீடி சுற்றினால் - எமக்கு 110 ரூபா கிடைக்கும். எனது மாத வருமானம் எப்படியம் 4500 ரூபாவுக்கு மேலே தான்வரும். இதன்மூலம், எனது தனிப்பட்ட தேவைகளை இலகுவாக நிறைவு செய்யமுடிகிறது. இவற்றுடன் குடும்பப் பாரத்தில் சிறு அளவையும் என்னால் தாங்கிக் கொள்ளமுடிகிறது.

நான் வேலைக்குப் போவதற்கு பூரண ஒத்துழைப்பு வீட்டில் கிடைக்கிறது. இவ்வாறு வேலை செய்வதினால்- தேவையற்ற பிரச்சினைகளையும் தவிர்த்துக்கொள்ளமுடிகிறது. எதிர்காலத்தில் எங்களுக்கென ஒரு தொழிலைத் தெரிந்துவைத்துள்ளோம். நாங்களும் உழைக்கிறோம் என்ற ஒரு சந்தோஷம், தன்நம்பிக்கை ஏற்படுகிறது.

**கலாவின் கருத்துக்கள்**

எமது பிரதேசத்தில் பீடிக்கைத் தொழில் மேற்கொள்ளப்படுகின்ற பரிச்சயத்தினால், நானும் இக்கைத் தொழிலை கடந்த 5 வருடங்களாகச் செய்துவருகின்றேன். எமது தேவைகளை நிறைவு செய்வதற்கு விடுமுறை எடுத்துக் கொள்ளலாம். எமது குடும்பத்திற்கு என்னுடைய சிறுபங்களிப்பும் உண்டு. இவ்வேலையைப் பூரணமாகப் பழகுவதற்கு 3 மாதங்கள் தேவை. இந்த வேலையைப் பழகும்போது, இருந்த மனநிலை இப்போது இல்லை. நாம் சுயமாகச் செயற்படு வதற்குப் பூரண சுதந்திரம் உண்டு. நாங்கள் எல்லோரும ஒரே வயதினராக இருந்தபோதிலும், புரிந்துணர்வுடன் ஏனையோரது கருத்திற்கு மதிப்பளித்துச் செயற்பட்டு வருகின்றோம்.

எமக்கும் எமது நிறுவனத்திற்

ளாக இந்தத் தொழிலைச் செய்து வருகின்றேன். எமக்கென (பெண்களிற்கு) ஒரு தொழிலை நாம் தெரிந்து வைத்திருந்தால், நாம் எமது சொந்தக்காலில் நிற்கலாம் என்ற மனத்தைரியம் ஏற்படும். இதனால், உற்சாகமாகச் செயற்படமுடியும் என்பது எனது கருத்து. என்னைப் பொறுத்தவரை - இந்தத் தொழில் இலகுவானது. அத்துடன், எமது செயற்பாட்டிற்கேற்ப வருமானத்தைப் பெறக் கூடியதாக வுள்ளது. இவ்வாறு தனது கருத்துக்களை மிகத்தெளிவாக அதே நேரம் தன்நம்பிக்கையுடன் பகிர்ந்து கொண்டார்.

பீடிக் கைத்தொழில் தொடர்பான இன்னும் பல கருத்துக்களை,





இவர்களின் உரையாடல் மூலம் அறிந்துகொள்ளமுடிந்தது. பெரும்பாலும் சந்தையில் பீடிகளின் விற்பனை விலையில் ஏற்படும் மாறறங்களுக்கு ஏற்பவே, எங்களுக்கான சம்பளமும் மாற்றமடையும். 1998 ஆம் ஆண்டு 1000 பீடிகள் சுற்றினால், 80 ரூபா கிடைக்கும். இந்தச் சம்பளம் கால மாற்றதிற்கு ஏற்ப அதிகரித்து, இப்பொழுது 110 ரூபாவாகவுள்ளது. இந்தத்தொகை இனிவரும் காலங்களில் அதிகரிக்கும் என்றே எதிர்பாக்கிறோம். ஏனெனில், புகைத்தல் - உடல் நலத்திற்கு உகந்தது அல்ல என தெரிந்த போதிலும், இதன் பாவனையாளர் அதிகரித்துக் கொண்டே வருகின்றனர். பிடிக்குப் பதிலான புகைப்பொருட்கள் இருந்தாலும், இதன் உற்பத்தி, விற்பனை செயற்பாடு அதிகரிப்பதற்கு - சிகரட் மூலம் தமது புகைத்தல் பயணத்தை ஆரம்பித்ததோர், சிறிது காலத்தில் பீடியுடனே பயணிப்பதை அவதானிக்கமுடிகிறது. அத்துடன், எல்லா இடங்களிலும் குறைந்தவிலையில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக, இருப்பதுமாகும்.

நாம் ஒவ்வொருவரும் சுத்தும் பீடிகளை - எமது கைத்தொழில் நிறுவனத்திற்கும், எமது நிறுவனத்திற்கும் இடையில் செயற்படுபவர் - வாராவாரம் குறிப்பிட்டளவு பீடிகளை எடுத்துச் செல்வார். அவ்வாறே மூலப்பொருட்களையும் கொண்டு வருவர். எமது

# தாய்ப்பால் முதல் முதலுதவி வரை

## மசாஜ்



குழந்தையை மசாஜ் செய்வதில் பலவித நன்மைகள் உண்டு. இதனால், தாய்க்கும் குழந்தைக்குமிடையேயுள்ள உறவு மேலும உறுதியாகிறது. குழந்தையின் உடலிலுள்ள தசைகள் புத்துணர்ச்சி பெறுகின்றன.

இதுதவிர, அண்மைக்கால ஆராய்ச்சிகள் இன்னொரு நன்மையையும் குறிப்பிடுகின்றன. மசாஜ் செய்யப்பட்ட குழந்தை - அதிக நேரம் தடையில்லாது தூங்குகிறது. இந்த ஆராய்ச்சியில் இருபது தாய்மார்கள் கலந்துகொண்டார்கள். அத்தனைபேரும் இருவாரங்களே நிரம்பிய குழந்தைகளுக்குத் தாய்மார்கள், இவர்கள் தினமும் தூங்குவதற்கு முன், குழந்தையை அரை மணிநேர மசாஜிற்கு உட்படுத்தினார்களாம். இதனால் குழந்தை அதிகநேரம் தடையின்றித் தூங்குகின்றது என்பதைக் கண்டுபிடித்தனர். சரியானவிதத்தில், மென்மையாக மசாஜ் செய்யவும் தெரிந்துகொள்ளவேண்டும்.

குழந்தைகளை மசாஜ் செய்வதற்கென்றே உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சர்வதேச அமைப்பிருக்கிறது (**International Association of Infant Massage**). இதில் 1996 இல் மட்டும் பத்தாயிரம் பெற்றோர்கள் - குழந்தைக்கு மசாஜ் செய்யும் கலையைக் கற்றுக் கொண்டார்களாம். மசாஜ் செய்வது குழந்தைக்கு மட்டுமல்ல, அந்த நேரத்தில் தாய்க்கும்கூட பெரும் மனநிம்மதியையும், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது என்கிறது அந்த அமைப்பு.

மசாஜ் செய்ய இயலாதவர்களோ, தெரியாதவர்களோகூட- குழந்தையை அணைத்துக்கொள்வது, அதன் முதுகைத் தடவிக்கொடுப்பது என்பதைச் செய்யலாம். மசாஜ் செய்வதன்மூலம் குழந்தை தேவைப்படும் அளவுக்கு - அளவான உடல்பருமன் இருக்கும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். அதுமட்டுமல்ல, வயிற்றுவலியிலிருந்து அளவுக்கதிகமான செயற்பாடுகள்வரை பல சங்கடங்களுக்கு - மசாஜ் ஒரு சிறந்த நிவாரணி என்றும் கண்டறிந்திருக்கிறார்கள்.(தொடரும்...)

**கூறமுடியுமா?**

நாங்கள் அறிந்த காலத்தில் இருந்தே எமது பிரதேசத்தில் பீடி சுற்றும் செயற்பாடு இடம்பெற்றது, இன்றும் தொடர்ந்து வருகிறது. இதனால் ஏற்பட்ட பரிச்சயத்துடன், நாங்கள் எல்லோரும் 1997, 1998 காலப் பகுதியில் பீடி சுற்ற ஆரம்பித்தோம். இந்தக் காலப்பகுதியில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால, வெளியிடங்களுக்குத் தொழில் ரீதியாகப் போய்வர முடியாமையுமே காரணங்களாகும்.

**இதன் உற்பத்திச் செயற்பாடுகள் பற்றி எம்முடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

பீடி சுற்றுவதற்குப் பயன்படுத்தும் இலை - பலாக்காட்டு இலை. இவ் இலையை நனைத்துத் தேவையான அளவில் வெட்டி, புகையிலைத் தூள் வைத்து சுற்றி, நூலினால் கட்டிவால் மடித்து, அதன் பின்னர் 12 பிடிகளைச் சேர்ந்து ஒரு கட்டாகக் கட்டுவார்கள். இதன் பின்னர் பீடியில் உள்ள ஈரத்தன்மையை நீக்குவதற்கு - வெயிலில் காயவைத்ததன் பின்னர், உரிய இடத்திற்கு அனுப்பப்படும். பீடி உற்பத்திச் செயற்பாட்டில் இவர்களின் இறுதி வேலையுடன் உரியநிறுவனத்தில் விற்பனைக்கான மெருகூட்டல் வேலைகள் இடம்பெறும்.

இந்தச் சிறுகைத்தொழில் முயற்சியை நீண்டகாலமாக மேற்கொண்டு வருபவர்களின் கருத்துக்கள் ஒரே நோக்கம் கொண்டவையாயினும், அவர்கள் முன்வைக்கும் காரணங்கள் - ஆளுக்காள் வித்தியாசமானது. அவர்களின் கருத்துக்களில் முதலில் -

**நிஷாவின் கருத்துக்கள்**

நான் கடந்த 5 வருடங்களாகயைப் பழகும்போது, இருந்த மன நிலை இப்போது இல்லை. நாம் சுயமாகச் செயற்படு வதற்குப் பூரண சுதந்திரம் உண்டு. நாங்கள் எல்லோரும ஒரே வயதினராக இருந்தபோதிலும், புரிந்துணர்வுடன் ஏனையோரது கருத்திற்கு மதிப்பளித்துச் செயற்பட்டு வருகின்றோம்.

எமக்கும் எமது நிறுவனத்திற்கும் நேரடியான தொடர்புகள் இடம் பெறுவது மிகமிகக்குறைவு. இருந்தபோதிலும், எமக்கான மூலப்பொருட்களையோ, சம்பளத்தையோ உரிய காலத்திற்குப் பெறக்கூடிய ஒழுங்குகளை மேற்கொள்வதினால், மன விருப்புடன் சந்தோஷமாக இவ் வேலையைச் செய்யக்கூடியதாகவுள்ளது.

**வாணியின் கருத்து**

குடும்பத்தைப் பார்க்கவேண்டும் என்ற காரணத்தினாலேயே, நான் இந்தத் தொழில் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினேன். 3 வருடமாக முழுமையான ஈடுபாட்டுடன் இத் தொழிலை செய்துவருகிறேன். இதனால் எங்கட காலில் நிக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கு. ஆரம்பத்தல் இது இல்லை. ஏதோ வாறம், பீடி சுத்துறம், காசு தாறார்கள், போகிறேன் என்றநிலை இருந்தது. ஆனால், இப்போது இந்தநிலை இல்லை. எமது சுயசெலவுகளை உடனுக்குடன் மேற்கொள்வதுடன், குடும்பச் செலவுகளிலும் ஒரு பகுதியை நிறைவு செய்வதினால் மன நிம்மதி ஏற்படுகிறது. இந்த மனநிறைவால் சந்தோசமாகத் தொழிலில் ஈடுபட முடிகிறது. இவ்வாறு யதார்த்தமாகத் தனக்கேயுரிய அமைதியான முறையில் பதிலளித்தார்.

**அதிஷாவின் கருத்து**

நான் கடந்த மூன்று வருடங்ககூடியதாக, இருப்பதுமாகும்.

நாம் ஒவ்வொருவரும் சுத்தும் பீடிகளை - எமது கைத்தொழில் நிறுவனத்திற்கும், எமது நிறுவனத்திற்கும் இடையில் செயற்படுபவர் - வாராவாரம் குறிப்பிட்டளவு பீடிகளை எடுத்துச் செல்வார். அவ்வாறே மூலப்பொருட்களையும் கொண்டு வருவர். எமது சம்பளங்களையும், ஒவ்வொரு மாதமும் அவரே பெற்று வந்துதருவார்.

இவரது ஆலோசனைகளும், பூரண ஒத்துழைப்பும் நிர்வாகத்தை நடாத்திச் செல்லும் சாதுரியமான் தன்மையுமே, நாம் ஒவ்வொருவரும் இத்தொழிலில் தொடர்ந்து செயற்படுவதற்கு காரணமென, நன்றி உணர்வுடன் உரையாடியவர்களிடமிருந்து, எமது செவ்வியை நிறைவு செய்யும் நோக்கில் இறுதியாக கூறவிரும்பும் கருதது என்ன என்றபோது-

பெரும்பாலும் கிராமங்களிலேயே இவ்வாறான தொழில்கள் இடம்பெறுகின்றன. இக்கிராமங்களில் வாழும் பெண்கள் இத் தொழிலைப் பழகி நல்ல நிலைக்கு வரவேண்டும்.

இந்தத் தொழில்தான் என்று இல்லாவிட்டாலும் தமக்குப் பொருத்தமான, அதேநேரம் மன நிறைவான ஒரு தொழிலை ஒவ்வொரு பெண்ணும் பழகிவைத்திருக்கவேண்டும்.

இவ்வாறு தமது கருத்துக்களை அனுபவரீதியாகப் பல வித்தியாசமான உணர்வுள்ள கருத்துக்களைப் பெறமுடிந்த திருப்தியுடன், பத்திரிகை சார்பாக நன்றி கூறிச் செவ்வியை நிறைவுசெய்து கொண்டோம்.

நேர்காணல் : காவலூர் விஜேந்திரன்

# பால்ரீதியாகப் பெண்களை ஒருபோதும் ஒதுக்கிவிட முடியாது

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அடுத்த மிக முக்கியமான விடயம் 'திருமணக் கற்பழிப்பு' என்பதாகும். எமது சமூகத்தைப் பொறுத்தவரையில், ஒரு ஆணும்-பெண்ணும் திருமணபந்தத்தில் இணையும்போது, அவர்கள் உடலுறவு கொள்வது பிழையல்ல எனக் காலம் காலமாக கருதப்பட்டு வருகிறது. ஆனால், இந்த விடயம்

**அண்மையில் இலங்கை சட்ட உதவி மன்றத்தினால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக, சட்ட ஆலோசனைகள் எனும் விடயம் சம்பந்தமாக - யாழ்.பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. அதிலே கருத்துரை வழங்கிய அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமியின் கருத்துகளிலிருந்து தொகுக்கப்பட்ட விடயங்கள் இப்பகுதியில் பிரசுரமாகின்றது.....**

கூட இன்று சட்டவாக்கத் துறையால் சிறிது மாற்றப்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தவரையிலே - ஒரு பெண் மனைவியாக இருந்தாலும்கூட, அவளது விருப்பத்திற்கு மாறாக கணவன் அவளுடன பாலியல் உறவுவைக்கமுடியாது எனும் நிலை காணப்படுகிறது.

உடலுறவிற்காக அவளை வற்புறுத்தினால்கூட, அது தண்டனைக்குரிய குற்றமாகும். இது ஏனைய நாடுகளிலே சட்டமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையிலே இந்த விடயம் சற்று வித்தியாசமாகவே நோக்கப்பட்டுள்ளது.

அதாவது, நீதி முறையாக ஆணும் பெணணும் பிரிந்திருக்கும்போது, பெண்ணுடைய சம்மதம் பெறாது கணவன் உடலுறவிற்காக துன்புறுத்தி வருவாராக இருந்தால், அது தண்டனைக்குரிய குற்றம். இவ்வாறான நிலையில் நடைபெறும் உடலுறவு கற்பழிப்பாகவே கருதப்படும். கற்பழிப்புக்குரிய தண்டனையே இத்தகைய குற்றத்திற்கும் வழங்கப்படும்.

இதனைப் பலர் அறியாமலுள்ளார்கள். ஆண்களும் இத்தகைய செயல் - தண்டனைக்குரிய குற்றம் என்பதை அறியாதுள்ளார்கள். பெண்களும் இத்தகைய செயல்களுக்காக நீதிமன்ற உதவியை நாடலாம் என்பதைத் தெரியாதுள்ளார்கள்.

அடுத்த முக்கியமான விடயம் "பாலியல் தொல்லை" என்பதாகும். இந்த விடயமும் எமது சட்டவாக்கத்துறையிலே புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும்.

"பாலியல் தொல்லைகள்" எனும் விடயத்திற்குள் அடக்கப்படுகின்ற விடயங்கள் எவையென அறிந்தால், பலர் ஆச்சரியப்படுவார்கள். சிலர் இந்த விடயங்களுக்கு எதிரானவர்களாகவும் இருப்பார்கள்.

ஒருவர் தனது சொற்களாலோ, செயல்களாலோ, கைகளாலோ பாலியல் ரீதியான துன்புறுத்தல்களைப் பெண்களுக்கு ஏற்படுத்துவாராக இருந்தால், அவை குற்றமாகக் கருதப்படும். இந்தவிடயம் பல்கலைக்கழகங்களிலும், உயர்கல்வி நிலையங்களிலும் பகிடிவதையென்ற பெயரில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல்களைக் கட்டுப்படுத்துவதற் காகத்தான் முக்கியமாக அமுல்படுத்தப்பட்டது.

ஏனெனில், பகிடிவதை என்ற போர்வைக்குள் புரியப்பட்ட பாலியல் துன்புறுத்தல்களால், பல மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. பலர் அங்கவீனர்களாகி இருக்கிறார்கள். பலர் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு, மனநோயாளர்களாக மாறி இருக்கிறார்கள். இந்தக் காரணங்களால் இந்த வகையான துன்புறுத்தல் மிகக் கொடூரமானதாகக் கருதப்படுகிறது.



பகிடிவதையைக் காரணமாக வைதது, ஒரு பெண் - பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு, அவள் நீதித்துறையை அணுகுவாளாக இருந்தால், அவளுக்குப் பாதுகாப்பு அளித்து, உரிய தீர்வைப் பெற்றுத்தர நீதித்துறை தயாராக இருக்கிறது.

இத்தகைய துன்புறுத்தல்களுக்கென விசேடமாக ஒரு சடடவாக்கமே காணப்படுகிறது. அதாவது, பகிடிவதை தொடர்பான 20 ஆம் இலக்க, 1998 ஆண்டு கட்டளைச் சட்டம். இந்தச் சட்டம் - 1998 ஆம் ஆண்டு மிகவும் அவசரமாக உருவாக்கப்பட்டது. அதற்குக் காரணம் இத்தகைய குற்றங்கள் 1998 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வெகுவாக அதிகரித்தமையே ஆகும்.

இத்தகைய குற்றங்களுக்குப் பத்து வருடங்களுக்கு நீடிக்கப்படக்கூடிய கடூழியச் சிறைத் தண்டனையும் மற்றும் தண்டப்பணமும் தண்டனையாக விதிக்கப்படலாம்.

அடுத்தவகை குற்றங்கள் எவையென ஆராய்ந்தால் - ஒரு பெண்ணை அவளது விருப்பத்திற்கு மாறாக பகிரங்கமான இடத்தில் வைத்துப் புகைப்படம் எடுத்தல். இது முக்கியமான ஒரு துஷ்பிரயோகமாகக் கருதப்படுகிறது. பாலியல்ரீதியான பிரசுரங்களை வெளியிடுதல், பாலியல்ரீதியான தூண்டுதல்களை ஏற்படுத்தக்கூடிய விடியோ, ஓடியோ, என்பவற்றை வெளியிடல், அதற்கு உடந்தையாகப் பெண்ணைப் பாவித்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.

எமது சொற்களால், பாலியல்ரீதியாக ஒருவரை இம்சைப்படுத்தக்கூடிய வகையில், கொச்சைப்படுத்தக் கூடியவகையில் நடந்துகொள்ளல். குறிப்பாகப் பத்திரிகைகள் பலவற்றில் பெண்களை வைத்துப் பல நகைச்சுவைகள் எழுதப்படுகின்றன. அவை பாலியல் ரீதியாக ஒரு பெண்ணைத் தாக்கத்திற்கு உள்ளாக்குமாக இருந்தால், அது நகைச்சுவையாகக் கருதப்படமாட்டாது. தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்.

இந்தரீதியிலே பார்க்கும்போது, பாலியல் ரீதியான பாடல்களைப் பெண்ணைப் பார்த்து பாடுவது, பகிரங்கமாகப் பட்டப்பெயர் சொல்லி அழைப்பது, அசிங்கமானமுறையில் ஒரு பெணணின் உடலமைப்பை வர்ணிப்பது என்பன சாதாரணவிடயமாகத் தெரிந்தாலும், இவை அனைத்தும் இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவைகளைப் பொறுத்தவரையிலே குற்றமாகவே கருதப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் - பாலியல் உணர்வுகளைத் தூண்டக்கூடிய படங்களைப் பார்க்கிறார்கள், புகைப்படங்களை வைத்திருக்கிறார்கள், புத்தகங்களை வாசிக்கிறார்கள். இவை அனைத்தும் அந்த மாணவர்களுடைய எதிர்கால வாழ்விலே பாரிய பாதிப்பை ஏற்படுத்திவிடக்கூடிய சக்திமிக்கன. இதனால், மாணவர்கள் இவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளைச் செய்து கொடுத்தல் - சட்டவாக்கத்துறையிலே பாரதூரமானதொரு குற்றமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அலுவலகங்களில்கூட, ஏராளமான பெண்கள் பாலியல்ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். மேலதிகாரிகள் ஆண்களாகவுள்ளபோது, அவர்களுக்கு கீழே பணிபுரியும் பெண் ஊழியர்கள் - சில சந்தர்ப்பங்களில் மிகவும் மோசமான முறையிலே பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

இந்த விடயத்திற்கு உதாரணமாக- 1999 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற சம்பவம் ஒன்றைக்குறிப்பிட முடியும். வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினுடைய தலைவராக இருந்த உயர் அதிகாரி ஒருவருக்குக் கீழ், ஒருபெண், தட்டெழுத்தாளராகக் கடமை புரிந்துவந்தார். இந்தப் பெண்ணை - குறித்த அதிகாரி தொடர்ந்து சொற்களாலும், செயல்களாலும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கி வந்தார். பத்திரங் களில் கையெழுத்து வாங்குவதற்காகச் சமர்ப்பிக்கும்போது, அவளது கைகளைத் தேவையற்றமுறையில் தீண்டிவந்தார்.

இருக்கைகளில் சமனாக உட்காரும் சந்தர்ப்பங்களில், வேண்டுமென்றே பல தொல்லைகளைப் புரிந்துவந்தார். ஒரு சமயம் இந்தப் பெண் 'லிப்டினுள்' பயணம் செய்யும்போது, இந்த உயர் அதிகாரியும் வேண்டுமென்றே அந்த 'லிப்டினுள்' ஏறிவிட்டார். 'லிப்டினுள்' வைத்து அவளைப் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்க முயற்சிசெய்தார்.

உடனே அந்தப் பெண் அவசர சமிக்ஞையைத் தட்டி, ஒருவாறு அவரது பிடியிலிருந்து வெளியேறிவிட்டாள். இந்த வழக்கு நீதிமன்றத்திற்குபோனபோது, அதிகாரி சார்பாக - அவர் பாலியல் வல்லுறவுபுரிய எத்தனித்தாரே தவிர, பாலியல் வல்லுறவு புரியவில்லையே என விதிக்கப்பட்டது.

ஆனால், நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒருபெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் அந்த அதிகாரி எடுத்ததாகக் கருதப்படு, தண்டனை வழங்கப்பட்டது.

இதிலிருந்து புலனாகும் விடயம் என்னவெனில் - பாலியல் தொல்லைகள் தொடர்பான வழங்குகளில் சம்பந்தப்படும் ஆண்களைத் தப்பவைப்பது மிகவும் கடினமான விடயம் என்பதாகும். அந்தளவிற்குஇந்த விடயம் தொடர்பாக நீதித்துறை இறுக்கமாக உள்ளது.

எனவே, பெண்கள் தமக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிராக, நீதிமன்றத்திற்குச் சென்றால், நிச்சயமாக பலன்கிடைக்கும்.

எனவே, பெண்கள் - பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டால், தயக்கமின்றி நீதிமன்றத்திற்குச் சென்று தங்கள் பிரச்சினைகளை முன்வைக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இதனால் பெண்கள் - பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து தம்மைக் பாதுகாத்துக் கொள்ள முடியும். (முற்றும்)

**தொகுப்பு ~ இ.சர்வேஸ்**



## சித்தமருத்துவத் தகவல்கள்

### முருங்கையின் மருத்துவப் பயன்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

வயிற்றில் தேவையற்ற சதை வளர்ந்து வேதனைப்படுபவர்களுக்கு, நூறுகிராம் சிற்றாமணக்கு எண்ணையோடு,. 10 கிராம் முருங்கைக்கீரையின் சாற்றைவிட்டு, மெழுகுப்பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துகொள்ளவும். காலையில் வெறும் வயிற்றில் இரண்டு தேக்கரண்டிவீதம், அரைப்பதமாகக் காய்ச்சிய பசுப்பாலில் கலந்து உண்டுவந்தால், வயிற்றில் வளரும் தேவையற்ற சதை கரைந்துவிடும். வயிற்றுப் பருமனும் குறைவடையும்.

### உதிரவாதம்

உதிரவாதம் என்னும் இரத்தக்கொதிப்புக்கு (B.P) - முருங்கையின் ஈர்க்கு 200 கிராம் அளவுக்கு எடுத்து, ஒரு மண் சட்டிக்குள் இட்டு, இத்துடன் நான்கு கிராம் மிளகுத்தூளையும் போட்டு, தகுந்த அளவிற்கு உப்பையும் சேர்த்து, ரசமாக இறக்கி, ஒரு மணிநேரத்துக்கு ஒருமுறை வீதம், ஒரு நாளைக்கு ஆறு அல்லது ஏழு முறை கொடுக்கவும், இரத்தக் கொதிப்பு குறைந்துவிடும். இத்துடன், உள்ளி நான்கு அல்லது ஐந்தை தட்டிப்போட்டுக் கொதிக்கவைத்துக் கொடுக்கலாம். இதனால் எரிவாயுநோயும் நீங்கிவிடும்.

### முருங்கைப்பூ

முருங்கைப் பூவுக்கும் மருந்துவக் குணங்கள் உண்டு. முருங்கைப்பூவைப் பாசிப்பயறு அல்லது துவரம்பருப்புடன் கூட்டுச்செய்து சாப்பிடலாம். நாவுக்குச்சுவை தருவதோடு, கண்ணுக்குக் குளிர்ச்சியையும், அழகையும் தரும். குடல் பலவீனத்தைப் போக்கும். இசை பாடுபவர்கள் சாப்பிட்டுவர, சரீர எழுச்சியுடன் வெண்கல குரலும் உண்டாகும்.

கை, கால் வீக்கம், குத்தல், குடைச்சல், உள்ளவர்களுக்கு - முருங்கைப்பூவை ஒருபிடி எடுத்து, சிறிதளவு தண்ணீர்விட்டு, அதை மெல்லிய நெருப்பில் எரித்து, கசாயமாக வடித்தெடுத்துக்கொண்டு, பொரித்த எண்ணெய், வெங்காயப் பொரியில் ஒரு சிட்டிகை எடுத்து கசாயத்தில் கலந்து சாப்பிடலாம்.

இவ்வாறு ஒரு நாளைக்கு இரண்டு அவுன்ஸ் வீதம் - காலை, மாலை மூன்று தினங்கள் சாப்பிடவேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள நோய்கள் விலகுவதோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து அருந்திவந்தால், சிறுநீர் சம்பந்தமான நோய்களும், கல்லடைசல் நோயும் நாளடைவில் குணமாகிவிடும். இதற்குப் பத்தியம் கிடையாது.

இதேபோலவே, முருங்கைப் பிஞ்சிற்கும் மருத்துவக் குணநலன்கள் உண்டு, முருங்கைப் பிஞ்சை, சாம்பாருடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால், வாத, பித்த கபம் என்னும் மூவகை வியாதிகளுக்கும் சிறந்தது. பத்தியக் களியாகவும் உபயோகப்படுத்தலாம். வயிற்று வலியும் நீங்கும்,. வயிற்றுப் புண்ணையும் ஆற்றும். ரணத்தை அதிகரித்து, நல்ல பசியை உண்டாக்கும், சரீரத்துக்கு அழகைக் கொடுக்கும், முக வசீகரம் ஏற்படும்.

### முருங்கைக் காய்.

அதிகம் முதிர்ச்சி அடையாத இரண்டு காய்களைத் துண்டு துண்டாக நறுக்கி, பசுவின் பாலில் போட்டுக் கொதிக்கவைத்து, பின் வெந்தயத்துடன், உள்ளிருக்கம் சோற்றை வழித்தெடுத்துச் சாப்பிட்டு வந்தால் - மெலிந்துபோகும் உடம்பினர் - பலமடைந்து வருவார்கள். இந்தமுறையல் காயில் எடுத்த சோற்றுடன், நான்கு உள்ளியைச் சுட்டு, சேர்த்து பிசைந்து அருந்திவந்தால், ஒரு மாதத்தில் எலும்புருக்கிரோகம் குறைந்து வருவதைக் காணலாம்.

**கே.ரட்ணராஜா**

(தொடரும்....)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க*
*தூங்காது செய்யும் வினை.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### முடிவற்ற பேச்சுக்களும் கைநழுவும் சமாதானமும்

நேற்றைய தினம் எதிர்வுகூறல் செய்தது போன்றே, ஜனாதிபதி பிரதமர் ஆகியோருக்கிடையேயான பேச்சுவார்த்தைகள் முடிவேதும் எட்டப்படாது முடிவுற்றதுடன், மீண்டும் அடுத்த வாரம் சந்தித்துப் பேசுவது என்ற தீர்மானத்தையும் எடுக்க வைத்துள்ளது. சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தை சுமுகமாகவும், இயல்பாகவும் நடந்ததாக அறிக்கைகள் தெரிவித்தாலும், நிச்சயமாக இருவரும் ஆர்த்மார்த்தமான விசுவாசத்துடனும், பிரச்சினைகளுக்கு விட்டுக் கொடுத்து நியாயமான தீர்வினை எட்டுவதற்கான வழிமுறைகளைக் காணவேண்டுமென்ற தொலைநோக்குச் சிந்தனையுடனும், பரஸ்பர புரிந்துணர்வுடன் கூடிய நம்பிக்கையுடனும், மேற்கொண்டிருக்ககூடிய சாத்தியம் இருந்திருக்காது என்பது நிச்சயமாகும்.

போட்டி - அதிகாரம் அரசியல் தலைமைகள் எப்போதுமே, தத்தம் பதவி நிலைகளைத் தக்கவைக்கும் அல்லது மேலோங்கச் செய்யும் இலக்குடன்தான், தமது அரசியல் நகர்வுகளை மேற்கொள்வர் என்பது தெரிந்த விடயமே.

சிறிலங்காவின் ஜனாதிபதியும், பிரதமரும் என்றைக்குமே அரசியலில் புரிந்துணர்வுத் தளத்தில் நின்று, எந்தவிடயம் குறித்தும் தேசிய உணர்வுடன், பிரக்ஞை பூர்வமாகப் பேசி எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்க்கமான முடிவொன்றைக்காணும் மனவுறுதியுடனும், அர்ப்பணிப்புடனும் பேசிய வரலாறே கிடையாது. அதிலும், குறிப்பாக இனப்பிரச்சினை மற்றும் அதற்கான அரசியற்தீர்வு குறித்த விடயங்களில் அவர்கள் இருவரும் எதிரும் புதிருமான நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர் என்பது தெளிவு.

நேற்று முன்தின சந்திப்பின்போதும், சமாதானப் பேச்சை முன்னெடுக்கும் பொறுப்பை, பாதுகாப்பு அமைச்சைத் தன் வசம் எடுத்துள்ள ஜனாதிபதியே ஏற்கவேண்டுமென தான் வலியுறுத்தியதாக ரணில் தெரிவித்துள்ளார்.

ரணிலின் கோரிக்கையில் நியாயம் இருப்பினும், ஜனாதிபதிக்கு உண்மையில் சமாதான நகர்வுகளின் மீதான பொறுப்பினை ஏற்கும் விருப்பார்வம் இல்லாத காரணத்தினால் அவர் அதனை ஏற்கத் தயாராக முன்வரப்போவது கிடையாது.

தமிழ்மக்களுக்கான நியாயமானதும், தீர்க்கமானதுமான அரசியல் உரிமைகளை, பேரினவாதிகளினதும், பௌத்த பிக்குகளினதும் அச்சுறுத்தல்கள் மற்றும் விருப்பங்களைப் புறந்தள்ளிவிட்டு ஜனநாயக - தார்மீக சிந்தனையுடன் வழங்க முன்வரும் மனோபலம் இரு தரப்பினரிடமும் கிடையாது என்பது சந்தேகங்களுக்கு அப்பாற்பட்ட உண்மையாகும்.

எனினும்கூட, இருதரப்பினரும் சமாதானம் குறித்த அவசியத்தை அறிக்கைகள் மூலம் வலியுறுத்துவதில் பின்நிற்பதில்லை என்பதும் - ஆனால், அதற்கான செயற்பாடுகளில் இணைந்து கருத்தொருமைப்பாட்டுடன், ஒரு தீர்வுக்கு வரவும், அதனை நடைமுறைப்படுத்தவும் மட்டும் முன்வருவதில்லை என்பது நாம் உணர்ந்துள்ள வரலாற்று அனுபவங்களாகும்.

நேற்று முன்தினம் நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் குழுவினரைச் சந்தித்து ஜனாதிபதி கலந்துரையாடியபோதும், அவர் தனது நடவடிக்கைகளை நியாயப் படுத்தி விளக்கமளித்ததாகத் தெரிகிறது.

நோர்வேக் குழுவினர்-ஏற்கனவே பிரதமர் ரணிலைச் சந்தித்துப் பேசியதுடன், நேற்றையதினம் வன்னி சென்று விடுதலைப் புலிகளையும் சந்தித்து, சமாதானப் பேச்சுக்கள் மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடியுமுள்ளனர்.

இதன்போது, தேசியத்தலைவர் வே.பிரபாகரனையும் அவர்கள் சந்தித்தமையானது, இன்றைய குழப்பநிலையில் முக்கியத்துவமிக்க ஒன்றாகின்றது. இந்த வகையில் பார்த்தால், விடுதலைப் புலிகள் சமாதானம் குறித்த தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பது தெளிவாகின்றது.

'சமாதானம்' என்பது வெறும் அறிக்கையளவிலும், பேச்சளவிலும் மட்டும் அமைந்த ஒன்றாகவும், காலங்கடத்தும் நடவடிக்கையாகவும் இருப்பதில் எதுவித அர்த்தமும் கிடையாது.

அதேசமயம், சமாதானம் குறித்த பேச்சுக்கள் மனவுறுதியுடனும், விரிவான அணுகுமுறையுடனும் பரந்த மனத்துடனும் மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்றாகவே இருக்க வேண்டும் என்பதுடன், பேச்சுக்களில் கலந்துகொள்ளும் சிறிலங்கா அரச தரப்பினர் அது ஜனாதிபதியோ, பிரதமரோ எவராக இருந்தாலும்சரி, அவர்கள் சுயாதீனமாக தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் வல்லமையுள்ளவராக இருக்க வேண்டுமென்பதே முக்கியம்.

அதற்கான திராணியும், தொலைநோக்குச் சிந்தனைத் திறனும் அவர்களிடம் இருக்கிறதா என்பதே கேள்வி.

தற்போதைய இருதரப்பு நிலைப்பாடுகளையும் அவதானிக்கும்போது, அத்தகைய ஆற்றல் இருதரப்பிலும் முழுமையாக இல்லையென்பதே அதற்குப் பதிலாக முன்நிற்கிறது.

நீண்டகாலச் சமாதானப் பேச்சுக்கள், இடைக்கால நிர்வாக தன்னாட்சிக் கட்டமைப்பு தொடர்பான திட்டவரைபினை ஆராயும் நிலைக்கு தற்போது வந்துள்ளநிலையில், ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கையின் பின்னர், ஏற்பட்டுள்ள குழப்பங்கள் அதன் தொடர்பான நிகழ்ச்சி நிரலை கேள்விக் குறியாக்கியுள்ளது.

இந்த நிலையில், விடுதலைப் புலிகளின் திட்டவரைபை நிராகரிக்கும் பொ.ஐ.முன்னணி தரப்பினர், முன்னர் சந்திரிகா ஆட்சியில் முன்வைக்கப்பட்ட அதிகார பரவலாக்கல் யோசனைகளின் அடிப்படையில், பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டுமெனக் கூறியுள்ளமையானது, அர்த்தமற்றதும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றுமாகும்.

ஒவ்வொரு அரசும், அதிகார பீடமும் அவரவர் நிலைப்பாட்டிலிருந்தும் - அதாவது, மீண்டும் மீண்டும் 'அ' னாவிலிருந்து பேச்சுக்களைத் தொடரநினைப்பது காலங்கடத்தும், தமிழ் மக்களைப் பேய்க்காட்டும் நடவடிக்கையேயாகும்.

## நாடும் நடப்பும்




# பொ.ஐ.மு. - ஜே.வி.பி. உடன்பாடு மிகவிரைவில் கைச்சாத்தாகும்!

பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் மிகவிரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டு கட்சிகளும் பலமாதங்களாக கூட்டணி குறித்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டுவந்தன. ஆனால் திடீரெனச் சில வாரங்களுக்கு முன்னர் பேச்சுக்களில் இருந்து விலகிக்கொண்டன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடரை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்து - மூன்று அமைச்சர்களை பதவி நீக்கம் செய்ததைத் தொடர்ந்து முன்னர் திட்டமிட்டபடி இரண்டு கட்சிகளும் கூட்டணி அமைத்துக்கொள்ளத் தீர்மானித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த முடிவுகளையிட்டு ஜே.வி.பி மகிழ்ச்சியடைந்துள்ளதுடன், பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் நெருங்கிச் செயற்படவும் இணங்கியுள்ளது.

ஜனாதிபதி திடீர் பொதுத்தேர்தல் ஒன்றுக்கு உத்தரவிட்டால் இரண்டு கட்சிகளும் இணைந்து பொதுப்பட்டியல் ஒன்றில் போட்டியிடவும் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கத்தை அமைப்பதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணி எடுக்கும் முயற்சிகளுக்கு, முழுமையான ஆதரவு வழங்கவும் ஜே.வி.பி தீர்மானித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஜே.வி.பியுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை, இருதரப்பு கூட்டணி குறித்த தெளிவான வரையறைகளைக் கொண்டிருக்கும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## பஸ்சேவை சீரின்மையால் போக்குவரத்து பாதிப்பு

தென்மராட்சி தெற்கு கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு, நாவற்குழி ஆகிய இடங்களில் மீள் குடியமர்ந்துள்ள மக்களும், பாடசாலை ஆசிரியர் மாணவர்களும், போக்குவரத்துக்களை மேற்கொள்ள போதியளவு பஸ்சேவை போக்குவரத்தில் ஈடுபடாமையால் பெரும் இடர்பாடுகளை அனுபவித்து வருகின்றனர்.

மேற்படி பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் 8.40 மணிக்கு ஆரம்பமாகி 2.40 மணிக்கு மூடப்படுகின்றன. இப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் வெளியிடங்களில் இருந்தே பாடசாலைக்கு தினமும் வருகைதருகின்றனர்.

ஆனால், போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுள்ள பேரூந்து காலை 9.30 மணிக்கே இங்கு வருகின்றது. இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் தினமும் நேரத்திற்கு பாடசாலைக்கு சமூகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் கல்விச் செயற்பாடுகளும் பெரும் பாதிப்பை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு, பாடசாலை ஆரம்பமாகும், முடிவடையும் நேரங்களுக்கு இசைவாக பஸ் சேவையை நடத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பிடம் வேண்டுகோள் விடுத்தபோதும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென, பாடசாலைச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

## சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு 1468 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அபிவிருத்திக்காக இவ்வாண்டு 1468 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாக, வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி எஸ்.குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளை புனரமைப்பதற்கும், வைத்தியசாலை உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை வழங்குவதற்கும் இந்த நிதி ஒதுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மாகாணசபை நிதியிலிருந்து 267 மில்லியன் ரூபாவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிகொட் திட்டத்தின் கீழ் 550 மில்லியன் ரூபாவும்,

உலகவங்கியிடமிருந்து 532 மில்லியன் ரூபாவும், யுனிசெப்பிடமிருந்து 15 மில்லியன் ரூபாவும், சிரானிடமிருந்து 80 மில்லியன் ரூபாவும், உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து 7.5 மில்லியன் ரூபாவும், சிமான் மருத்துவ அமைப்பிடமிருந்து 3 மில்லியன் ரூபாவும், மத்திய அமைச்சின் சுகாதார அமைச்சிடமிருந்து 7.5 மில்லியன் ரூபாவும், வட - கிழக்கு சுகாதார அபிவிருத்திக்காக இவ்வாண்டு கிடைக்கப்பெற்றதாக டாக்டர் குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த கால யுத்தத்தினால் முற்றாகச் சேதமடைந்த மகிழவெட்டுவான், உன்னிச்சை, மண்டபத்தடி ஆகிய இடங்களில் உள்ள மத்திய மருந்தகங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்ததாகவும் அவை விரைவில் திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### இந்த வருடம் உயர்தரப் பரீட்சையில் தோற்றி

# கற்கைநெறி தொடராத மாணவர்கள் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும்

## மானிய ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி அமைச்சின் கீழுள்ள கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்வாரியாக விண்ணப்பித்த மாணவர்கள், மேற்படி கற்கை நெறிய்ை தொடர்வதில்லை என்று தீர்மானித்தால், அதை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று பல்கலைக்கழக ஆணைக்குழுத் தலைவர் கேட்டுள்ளார்.

இந்த மாணவர்கள் - தாங்கள் விண்ணப்பிக்கும் உயர் கல்வி நிறுவனங்களின் புதிய மாணவர் பதிவிற்கான முடிவுத் திகதியில் இருந்து, முப்பது நாட்களுக்குள் இது குறித்து சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

அவ்வாறு அறிவிக்காதுவிட்டால், 2004 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு அந்த மாணவர்கள் தோற்றுவார்களானால், அந்தப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் உயர்கல்வி கற்கைநெறியொன்றுக்கு அனுமதி பெறுவதற்கான வாய்ப்பை அந்த மாணவர்கள் இழக்க நேரிடும். அந்தக் கற்கைநெறிக்கு இந்த மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவார்கள் என பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் பீ.ஆர்.என்.மெண்டிஸ் தெரிவித்தார்.

# இந்த வார பலன்கள்

## 14.11.2003 ~ 21.11.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சந் சனி |
| செவ் யுரே | 14 இ. 11-52 கட-சந்<br>16 இ. 10-50 விரு-சூரி<br>17 கா. 9-22 சிங்-சந்<br>19 பி.ப. 3-13 கன்-சந் | | |
| நெப் | | | குரு |
| | புத, சுக் | சூரி கேது | |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பல நற்பலன்களைக் கொடுக்கக் கூடியது. தொழில்முயற்சி சிறப்பாக இருக்கும். நிறைந்த வருவாய் கிடைக்கும். வெளிநாட்டில் வதியும் உறவினர்களாலும் உதவிகள் கிட்டும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்க இடமுண்டு. தேகசௌக்கியம், குடும்பநிலை என்பன நன்றாக அமையும். பிரயாணங்கள் தங்கு தடையின்றிக் கைகூடும். திருமணத்தை எதிர்நோக்குவோர் தமக்குப் பிடித்த வாழ்க்கைத்துணைவர் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சியடைவர். உத்தியோகத்தர்களுக்கு மதிப்பும், சிலருக்கு விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கலாம். வியாபாரிகள் தமது முதலீடுகள் நன்கு விற்பனையாகி, நிறைந்த இலாபத்தைப் பெறுவர். விவசாயிகளும் தமது சரக்குகளைச் சந்தைப்படுத்தி இலாபமடைவர். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், புதுத்தென்பும் ஏற்பட்டு முன்னணி வகிப்பர்.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இடபராசியினருக்கு செய்தொழிலில் பிரயாசை கூடுதலாக இருப்பினும், ஏற்ற வருவாய கிடைப்பது கடினம். தொடங்குகின்ற எக்கருமமும் வெகுபிரயாசையின் பின்பே கைகூடும். தேகசௌக்கியம் நன்றாக இருப்பினும், குடும்பத்தில் வைத்தியச் செலவுகள் தலைதூக்கும். கொடுக்கல் வாங்கல்களிலும் பிணககுகள் தோன்றும். இனபந்துக்களிடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிரயாணங்களினாலும் செலவுகள் அதிகரிக்கும். இல்லறத்தில் இணைய விரும்புவோருக்கு பல அலைச்சல்களின் பின்பே கருமம் கைகூடும். உத்தியோகத்தர்கள் வேலைப் பழுவினால் கஷ்டமடைய நேரும். தூரதேசப் பிரயாணத்தை எதிர்நோக்குவோர் ஏமாற்றமடைவர். வியாபாரிகள் தமது விடாமுயற்சியால், வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தி, நல்ல இலாபம் பெறுவர். மாணவர்களுக்குக்கூடிய ஊக்கமும், கடின உழைப்பும் தேவை.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*

மிதுனராசியினருக்குச் செய்தொழி லில் வருவாய் சிறப்பாக இருக்கும். வரவிற்கும் பார்க்கச் செலவுகள் கூடுதலாக இருக்கும். வரவேண்டிய கடன்கள தேவைக்கு உதவாமல் இருக்கும். தேககசுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். இதனால், மருத்துவச் செலவுகளும் கூடுதலாக இருக்கும். குடும்ப உறவுகளிலும் கருத்து வேற்றுமை காணும். மறைமுக எதிரிகளைப் பற்றி அவதானமாக இருக்கவும். திருமண நிகழ்வுகள் காலதாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத் துறையிலுள்ளோர் மேலதிகாரிகளின் வெறுப்பைத் தேடிக்கொள்ளாது அவதானமாகக் கருமமாற்றவும். வியாபாரிகளுக்கு தொழில் சம்பந்தமான பிரயாணங்கள் அடிக்கடி ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் குறைவாகவே காணப்படுவர்.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

இவர்களுக்குத் தொழில் முன்னேற்றமும், வருவாயும் கிட்டும். புதிய பொருட்களை வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவர். மனச்சந்தோசமும், புத்துணர்ச்சியும் தோன்றும். எடுத்தகருமங்கள் விரைவில் திருப்தியாக நிறைவுபெறும். தூரதேசத்திலிருந்து இனத்தவர்கள் வீட்டுக்கு வருகை தருவார்கள். வீட்டில் குதூகலமும், கலகலப்பும் காணும். தூரதேசப் பிரயாணத்தை மேற்கொள்ள விரும்புவோர் நற்பலன் காண்பர். உத்தியோகத்தர்கள் தொழிலில் கூடிய ஈடு பாடும், ஆர்வமும் உடையவராகக் காணப்படுவர். ஆடம்பரப் பொருட்களை வியாபாரம் செய்வோர் கூடிய இலாபமடைவர். திருமண முயற்சிகளும் விரைவில் கைகூடும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமும், விளையாட்டில் பரிசுகளையும் பெறுவர்.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்கராசியினருக்கு இவ்வாரம் பல சிறப்பான பலன்களைக் காட்டும். குடும்ப வாழ்க்கை திருப்தியாக அமையும். பொருளாதார நிலையிலும் முன்னேற்றமுண்டு. குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடக்கும். இனபந்துக்களுடனும் உறவு சுமுகமாக இருக்கும். பிள்ளைகளாலும், நண்பர்களாலும் உதவிகள் கிடைக்கும். பெண் க்ள் பலவகையாலும் ஊக்கமும், உற்சாகமும் உடையவராகக் காணப்படுவர். திருமண நிகழ்வுகளும் கைகூடி மகிழ்ச்சியைத்தரும். உத்தியோகத்தர்கள் பலருக்கு சிறப்பும், முன்னேற்றமும் கிடைக்கலாம். வியாபாரத்துறையினருக்கு விற்பனவுகள் சிறப்பாக நடைபெற்று, இரட்டித்த இலாபம் கிடைக்கும். மாணவர்கள் பரீட்சையில் கூடுதலான மதிப்பெண பெறுவர்.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் சிறப்பான பலன்கள் நடை பெறும் வாய்ப்புக்கள் குறைவு. செய்தொழிலில் பிரயாசை அதிகமாக இருப்பினும், போதிய வருவாய் கிடையாது. மனதில் நிம்மதிக் குறைவும், சோர்வும் காட்டும். தொடங்குங் கருமங்கள் தாமதமாகவே நிறைவேறும். கடன் தொல்லைகளும் தலைதூக்கும். எல்லாவற்றிலும் அவதானம் தேவை. திருமணம் முதலிய நிகழ்வுகள் இழுபறிநிலையில் இருக்கும். தூரதேசப் பிரயாணத்தை விரும்புவோர் ஏமாற்றமடைவார்கள். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு கூடுதலாக இருக்கும். வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். மாணவர்கள் சோம்பல் தன்மையால் முன்னேற்றத்தை இழப்பா.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*

துலாராசியினருக்குச் செய்தொழில் விருத்தியின்மையும், பொருளாதாரக் கஷ்டமும் காட்டும். வீட்டில் அடிக்கடி சசசரவும், நிம்மதிக்குறைவும் காணப்படும். கொடுக்கல், வாங்கல்களில் சமாளிக்க முடியாதநிலை ஏற்படும். பிரயாசை, அலைச்சல் கூடுதலாக இருக்கும. எக்கருமத்தையும் சரியானமுறையில் எடுத்துச்செல்ல முடியாமல் தத்தளிப்பர். தூரதேசப் பிரயாணங்கள் கைகூடாது. திருமணமும் கானல்நீர்போல காலத்தை இழுக்கும். உத்தியோகத்தினருக்கு வேலைப்பழு கூடுதலாக இருப்பதால், நிம்மதிக் குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்கள் தேவையற்ற விடயங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிகராசிக்காரர் இவ்வாரம் பல நற்பலன்களைக் காண்பர். தொழில்மூலம் வருவாய் அதிகரிக்கும். தேகாரோக்கியம், குடும்பநலம் முதலியன நன்று. எடுத்த கருமங்கள் விரைவில் கஷ்டமின்றிப் பலிதமாகும். கடன்தொல்லைகள் ஏதும் இருப்பின், நிவர்த்தி செய்யப்படும். பிள்ளைகளால் உதவிகள் உண்டு. தொழிலாளர்களுக்கு எதிர்பாராத வகையில் இலாபப் பங்குகள் கிடைக்கும். இல்வாழ்க்கையில் இணைய விரும்புவோர் கருமம் கைகூடி மகிழ்ச்சியடைவர். புதிதாக உத்தியோகத்தில் சேரவிரும்புவோர் காரியம் கைகூடப்பெறுவர். பிரயாணங்கள் சுமுகமாக அமையும். இல்லத்தரசிகளுக்குப் பொறுப்புகள் கூட இருப்பினும், வாழ்க்கை சந்தோசமாக அமையும். வியாபாரிகள் அபரிமிதமான இலாபம் பெறுவர். மாணவர்கள் சித்தியும், பாராட்டுக்களும் அடைவர்.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனுராசியினருக்கு வீட்டில் சந்தோசமான கருமங்கள் நடைபெறும். தொழில் சிறப்பும், வருவாயும் அதிகரிக்கும். மன உற்சாகமும், குதூகலமும் இருக்கும். உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் உதவுவார்கள். கொடுக்கல் வாங்கல்கள் முன்னேற்றத்தைக் கொடுக்கும். தேகசௌக்கியம், குடும்ப சுகம் பாதிப்படையாது. பெண்கள் மனநிறைவுடனும், குதூகலத்துடனும் காணப்படுவர். இனபந்துக்களிடையே கருத்து வேற்றுமைகள் இருந்தால், அவை நீங்கிச் சந்தோசமாக நடப்பர். உத்தியோகத்தர்கள் மனநிறைவுடன் கருமமாற்றுவர். வியாபாரிகள் விற்பனைமூலம் அதிக இலாபம் பெறுவர். புது முதலீட்டுக்கும் நன்று. மாணவர்கள் உற்சாகத்துடன் கல்வியில் ஈடுபடுவர்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகரராசிக்காரர்களுக்கு பொருளாதாரம் ஓரளவு நன்றாக இருப்பினும், வீட்டில் நிம்மதி குன்றும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் நிலவும். தேகசௌக்கியமும் குறைவாகவே இருக்கும். வரவிலும் பார்க்கச் செலவு கூடுதலாகவே காட்டும். எல்லாக்கருமங்களலும் தாமதம் காணும். வெளிநாட்டிலிருந்து நற்செயதி வரும். திருமண நிகழ்வுகள் தாமதமாகவே நிறைவேறும். தூரதேசப்பிரயாணங்கள் சம்பந்தமாக அலைச்சல் அதிகமாகும். விவசாயத் துறையினர் வியாபாரிகள் கூடியலாபம் பெறுவர். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலைப்பழு அதிகமாயினும் மனநிறைவுடன் கருமமாற்றுவர். வாகனம் செலுத்துவோர் அவதானமாக இருக்கவும். மாணவர்கள் ஊக்கமும், உயர்ச்சியும் பெறுவர்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*

இவர்கள் குடும்ப நிலையில் மன அமையின்மையும் முரண்பாடுகளுமுடையவராக இருப்பர். எதையும் சமாளிக்க முடியாமல் இருக்கும். இனபந்துக்களிடையேயும் சச்சரவுகள் தோன்றும். வைத்தியச் செலவுகளும்கூடும். தேவையில்லாத விசயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும் பிள்ளைகளால் உதவிகிடையாது. தூரதேசப் பிரயாணத்தை விரும்புவோர் முகவர்களிடம் பணத்தைக் கொடுத்து அலைச்சலையே வாங்கிக்கொள்வர். திருமணமும் இழுபறி நிலையிலேயே இருக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகாமல் நடந்து கொள்வது நன்று. மாணவர் சோம்பல் மிகுந்து காணப்படுவர்.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

மீனராசியில் பிறந்தவர்களுக்குப் பல முன்னேற்றமான பலன்கள் காத்திருக்கின்றன. தொழில் சிறப்படையும். வருவாய் மிகும். உறவினர்கள் ஒத்தாசை புரிவார்கள். குடும்ப அங்கத்தவர்கள் மனநிறைவுடன் காணப்படுவர். உல்லாசப் பிரயாணங்க ளையும் மேற்கொள்வர். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். வங்கிக் கணக்குகள் ஆறுதலைத்தரும். திருமண நிகழ்வுகள் விருப்பம்போல் நிறைவுபெறும். உத்தியோகத்தர்கள் சுறுசுறுப்புடன் தங்கள் கடமைகளைச் செய்து நன்மதிப்பைப்பெறுவர். வியாபாரிகள் முதலீடுகளை ஊக்கத்துடன்வற்று, நல்ல இலாபம் பெறுவர். பிரயாணத்தை மேற்கொள்வோர் விரைவில் அனுகூலம் பெறுவர். மாணவர்கள் கல்வியில் சிறப்பான முன்னேற்றடைவர்.


## UNICEF அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் முன்னெடுக்கும் மாபெரும் பரிசுப்போட்டிக்கான வினாக்கொத்து

1. AIDS என்பதன் விரிவாக்கம் என்ன?
2. AIDS நோய்க்குரிய காரணி என்ன?
3. HIV இன் விரிவாக்கம் என்ன?
4. AIDS ஒரு பாலியல் நோயா?
5. HIV கிருமி மனித உடலில் எக்கலத்தைத் தாக்கி அழிக்கின்றது?
6. AIDS பரவும் வழிகள் எவை?
7. AIDS தடுக்கும் வழிகள் எவை?
8. நுளம்பினால் HIV கிருமி பரவுமா?
9. AIDS ஒரு பரம்பரை நோயா?
10. AIDS நோயை குணப்படுத்த முடியுமா?
11. AIDS நோயாளியை எவ்வாறு பராமரிக்கலாம்?
12. HIV உடலில் தொற்றியதை எவ்வாறு உறுதிசெய்யலாம்?
13. AIDS நோய் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு?
14. உலக AIDS தினம் எப்போது நினைவு கூரப்படுகின்றது?
15. AIDS விழிப்புணர்வுத் திட்டத்தை மிகத் துரிதமாக யாழ்.மாவட்டத்தில் நடாத்திவரும் நிறுவனம் எது?

மேற்படி வினாக்களுக்கான விடைகளை 13.11.2003 வியாழக் கிழமை பத்திரிகையில் வெளியான கட்டுரையிலிருந்து தெரிவுசெய்து, எழுதி விடைத்தாளை எமது தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்கவும்.

**உங்கள் பதில்கள் வந்துசேரவேண்டிய முகவரி -**

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.



## UNICEF அனுசரணையுடன்
### அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் முன்னெடுக்கும் மாபெரும்

### மாபெரும் பரிசுப்போட்டி

### வினாவிடைப் போட்டி

- மேற்குறிப்பிட்ட வினாக்களுக்கான விடைகள் -நேற்றைய பத்திரிகையின் கட்டுரையில் உள்ளன.
- உங்கள் விடைகளைத் தெளிவாக ஒரு தாளில் இலக்கமிட்டு எழுதுங்கள். உங்கள் பெயர், முகவரி, வயது, பிரதேச செயலர் பிரிவு - மாணவராயின் பாடசாலை, தொழில் என்பவற்றைச் சுயமாக ஒரு தாளில் குறிப்பிட்டு, விடைத்தாளுடன் இணைத்து, எமது முகவரிக்கு அனுப்பவும்.
- அனுப்பவேண்டிய இறுதித் திகதி 20.11.2003.

### ஓவியப்போட்டி

- ஓவியப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் -உங்கள் பெயர், முகவரி, வயது, பிரதேச செயலர் பிரிவு, மாணவராயின்-பாடசாலை, தொழில் என்பனவற்றை ஒருதாளில் குறிப்பிட்டு, எமது முகவரிக்கு 20.11.2003 இற்கு முன் அனுப்பவேண்டும்.
- பரீட்சை மண்டபத்திற்கு 23.11.2003 (ஞாயிறு) 9.30 மணிக்கு ஆயத்தமாக வருதல்வேண்டும்.
- ஓவியப்போட்டித் தலைப்புக்கள்:
  எயிட்ஸைத் தடுப்போம்.
  எயிட்ஸினால் அழியும் மானிடம்.
  எயிட்ஸும் எதிர்காலமும்.
- பரீட்சை நிலையங்கள்:
  யாழ்ப்பாணம் - வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.
  சாவகச்சேரி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
  நெல்லியடி - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
- சுயவிபரங்களை அனுப்பியவர்கள் - அருகிலுள்ள பரீட்சை மண்டபத்தில் சென்று, ஓவியப்போட்டியில் பங்குகொள்ளலாம்.

எமது முகவரி:- அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 106, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

### பரிசில்கள் விபரம்

- பரிசளிப்பு வைபவம் -யாழ். வீரசிங்கம் மண்டபத்தில், டிசம்பர் 1 உலக எயிட்ஸ் தினத்தன்று வழங்கப்படும்.
- பரிசுகள் -ஒவ்வொரு கல்வி வலயங்களில் 6 மாணவர்களுக்கும், 6 வெளியாட்களுக்கும் வழங்கப்படும்.
- 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பரிசுகளோடு, மூன்று ஆறுதல் பரிசுகள் இவற்றுள் அடங்கும்.
- மேலும் சிறப்புப் பரிசுகள் உட்பட, 120 இற்கு மேற்பட்ட பரிசுகள்.

**இன்றே சிந்தியுங்கள்! உடனே செயற்படுங்கள்!**

எயிட்ஸ் இல்லாத மனித சமுதாயத்தை கட்டியெழுப்ப
இன்றே இணைவோம் நாமெல்லோரும்.

TRRO
106, 4th Cross Street, Jaffna.

சி/1799)

யாழ்ப்பாணம்,

# பலஸ்தீனப் பிரதமர் கூரேயுடன் இஸ்ரேல் பிரதமர் பேசவுள்ளார்

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனிற்கும், பலஸ் தீனப் பிரதமர் அகமட் கூரேக்கும் இடையே 10 நாட்களுக்குள் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதாக, இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் சில்வன் சலோம் தெரிவித்துள்ளார். இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் - இருபகுதியினரிடையேயும் அடிமட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதாகவும் சலோம் தெரிவித்தார்.

இவற்றிற்கான ஒழுங்குகள் நடைபெற்றுவருவதாக பலஸ்தீனத்தின் சார்பாக இந்தச் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ள "சயீப் எகுறகர்" தெரிவித்துள்ளார்.

கூரேயின் தலைமையில் அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்ட பின், பலஸ்தீனத்துடன் போர்நிறுத்தமொன்றை உருவாக்குவதும் சர்வதேச சமாதான மாநாடு ஒன்றை நடத்துவதும் தனது முக்கிய நோக்கங்கள் என, ஷரோன் தெரிவித்தார்.

2004 ஜனவரியில் நடைபெறவுள்ள தேர்தலை நடாத்துவதற்கு அனுசரணையாக எல்லைப்பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படைகளை விலக்குமாறு பிரதமர் கூரே இஸ்ரேல் அரசைக் கேட்டிருந்தார்.



புதிய அரசில் போரணிக் குழுக்கள் அங்கம் வகிக்காத போதிலும், மோதல்களை நிறுத்திக் கொள்ளுமாறு பலஸ்தீனப் பிரதமர் கூரே அக்குழுக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.





நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெலகீசன் குழுவினரை தமிழீழ காவல்துறையினர் பலத்த பாதுகாப்புடன் அழைத்துவருவதையும், சந்திப்பு இடம்பெறும் அரசியற்துறை நடுவப்பணியகத்திற்கு வந்த அவர்கள் வாகனத்திலிருந்து இறங்குவதையும் படத்தில் காணலாம்.

## ஈராக்கில் தற்கொலைத் தாக்குதலில் இறந்த இத்தாலியப் பொலிசாரின் தொகை அதிகரிப்பு

ஈராக்கில் உள்ள இத்தாலியப் பொலிஸ் நிலையத்தின்மீது நடத்தப்பட்ட தற்கொலைத் குண்டுத்தாக்குதலில் 18 இத்தாலியப் படையினர் கொல்லப்பட்டனர்.

மேலும் 20 இத்தாலியப் படையினரும், 59 ஈராக்கியர்களும் காயம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிறிதொரு பகுதியில் பாதையில் புதைக்கப்பட்டிருந்த குண்டுவெடித்ததில் அமெரிக்க படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.



இதனிடையே, அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் - ஈராக்கில் கடமையாற்றும் அமெரிக்க நிர்வாக அதிகாரி போல் பிரிமர் வாஷிங்டனில் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடுவது குறித்தும், ஈராக்கியர்களிடம் ஆட்சிப் பொறுப்புக்களை ஒப்படைப்பது தொடர்பாகவும் இருவரும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.


ராஜா யாழ்ப்பாணம்.

10.30, 2.30, 6.30 (பு.நே)

விக்ரம், சூர்யா, லைலா நடித்த

பிதாமகன்

இரவு 9.30க்கு மட்டும்

XXX (ஆங்கிலம்)

(சி-1751)

திரைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

சரத்குமார், கிரண் நடித்த

திவான்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

AMERICAN BEAUTY

(சி-1752)


## சமாதானத்தின்...

பேச நாம் தயாராகவுள்ளோம். அதேவேளை தெளிவான அரசியல் அதிகாரம் மிக்க தலைமை தென்னிலங்கையில் உருவாகவேண்டும்.

முடிவுகளை எடுப்பது, அந்த முடிவுகளை முன்னெடுத்துச்செல்லக் கூடிய சரியான அரசியல் தலைமை உருவாகாமல் நாம் பேச்சுக்களை முன்னெடுப்பது கேள்விக்குரியதாகவுள்ளது.

இன்று நடைபெறும் சூழல் அதிர்ச்சியையும், கவலையையும் அளிக்கக்கூடியதாக உள்ளது. தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்கள் உட்பட்ட சர்வதேச சமூகமே நல்லதொரு எதிர்பார்ப்போடு இருந்த சூழல்நிலமையை குழப்பி, அதிகாரப் போட்டியை ஏற்படுத்தியமை எல்லோருக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த வகையில் எமக்கும் அந்த கவலை ஏற்பட்டுள்ளது.

***நோர்வேயை விடுத்து வேறு ஓர் அனுசரணையாளரை ஏற்படுத்துவது தொடர்பாக இன்று ஆராய்ந்துள்ளீர்களா?***

அப்படியான கருத்துக்கள் எவையும் இன்று ஆராயப்படவில்லை.

# அறிவித்தல்

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் பிரதேசசபைகள் கட்டளைச்சட்டம் 15 அத்தியாயம் 147, 148, 149, 150, 152, (11) இன் கீழ் 2004 ஆம் ஆண்டுக்குரிய வியாபார உத்தரவாதப் பத்திரம் பெறுவதற்கான அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் தங்கள் வியாபார நிலையங்களுக்கு 2004 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை மானிப்பாய் பட்டின/கிராம, பண்டத்தரிப்பு பட்டின/கிராம அலுவலகத்தில் ரூ 12/- செலுத்தி பெற்று, அதனைப் பூர்த்திசெய்து 31.12.2003 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு தங்களுக்கு வியாபார தரவுப் பத்திரம் வழங்கப்படலாம் என சிபார்சு செய்யப்படின் அதற்கான கட்டணத்தை 31.03.2004 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி 2004 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் குறித்த நிலையங்களுக்கு கடந்த காலங்களில் உத்தரவுப் பத்திரக் கட்டணம் செலுத்தாதவர்களும் அந்நிலுவைப் பணத்தையும் செலுத்தல் வேண்டும். பெயர் மாற்றங்கள் அத்துடன் நிலுவை சம்பந்தமான பிரச்சினைகள் இருப்பின் சம்பந்தப்பட்ட உப அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

31.03.2004 ஆம் திகதிக்கு பின்னர் எமது சபையின் வியாபார உத்தரவுப் பத்திரம் பெறுவதற்கு எந்தவொரு வியாபார/தொழில் நிலையமும் வியாபார/தொழில் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருவதுடன், சபையில் பெறும் உத்தரவுப் பத்திரத்தை தங்கள் வியாபார/தொழில் நிலையங்களுக்கு முன் பார்வைக்கு வைக்கப்படல் வேண்டும் என்பதையும் 2004 ஆம் ஆண்டுக்கான உத்தரவுப் பத்திரம் பெறாது நடத்தப்படும் வியாபார/தொழில் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் (பகுதி 4 (ஆ) உள்ராட்சி 1271 இலக்க 10.01.2003 ஆந் திகதிய) பிரசுரிக்கப்பட்டவாறு உரிய உரிமக் கட்டணத்தை செலுத்துமாறும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.**

**பிரான்சிஸ் விக்டர்,**
**செயலாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**தலைமைச் செயலகம்,**
**மானிப்பாய்.**

12.11.2003 (சி-1798)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நடாத்தும் சமய அறிவுப் போட்டி - 2003

எமது குழுவினால் வழமை போன்று இவ்வருடம் நடாத்தப்படவுள்ள மேற்படி போட்டிக்கான பரீட்சை எதிர்வரும் 16.11.2003 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு (புதிய நேரம்) பின்வரும் 25 நிலையங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

**வடமராட்சி வலயம்**
- யா/வட இந்து மகளிர் கல்லூரி
- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
- யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி

**தென்மராட்சி வலயம்**
- யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
- யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
- யா/மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை

**யாழ்ப்பாண வலயம்**
- யா/இந்து மகளிர் கல்லூரி
- யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை
- யா/நல்லூர் இந்து மகளிர் பெண்கள் பாடசாலை

**வலிகாம வலயம்**
- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
- யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
- யா/இராமநாதன் கல்லூரி
- யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
- யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
- யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
- யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

**தீவக வலயம்**
- யா/நயினாதீவு மகா வித்தியாலயம்
- யா/வேலனை மத்திய கல்லூரி
- யா/ஊர்காவற்துறை சென்.அன்ரனீஸ் மகா வித்தியாலயம்
- யா/காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா - வித்தியாலயம்.
- யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்
- யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்
- யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்
- யா/சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், வேலணை.
- யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் தவறாது பரீட்சைக்குத் தோற்றி தமது திறமைகளை வெளிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மாணவர்கள் தமக்கு வசதியான எந்தவொரு நிலையத்திலும் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.** (சி-1796)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாஞ்சந்தி

எதிர்பார்த்தது போன்று ஜனாதிபதியும், ரணிலும் முடிவெதுவும் எட்டவியலாத தமது முதற்சுற்றுப் பேச்சுக்களை முடித்துக்கொண்டார்கள்.

அடுத்த சுற்று அடுத்த வாரத்தில் நடைபெறுமாம்!

அடுத்த சுற்றிலும் ஏதாவது முடிவு எடுப்பார்களா என்பது சந்தேகமே...?

மீண்டும் இன்னொரு சுற்றுப் பேசலாம் என்றும் முடிவெடுக்கலாம்...

எல்லாமே சுற்றிச்சுற்றி சுப்பற்றை கொல்லைக்குள்ளை என்ற மாதிரி பொதுமக்களின் தலைகளைச் சுற்ற வைக்கும் விடயமாகத்தான் இருக்குது எள்றார் முகத்தார்.

எல்லோருமாகச் சேர்ந்து எங்களட காதிலை பூச்சுற்றாமல் இருந்தாச் சரிதான், என்றார் மணியம்.

பேச்சுக்கள் மிகவும் சினேகபூர்வமாகவும், சுமூகமாகவும் நடந்ததாமே என்றார் முகத்தார்.

அவை இரண்டு பேரும் அந்தக் கால நண்பர்கள் தானே... சினேகபூர்வமாப் பேச என்ன தடை ... என்றார் மணியம்.

ஒருவேளை அந்தக்கால மலரும் நினைவுகள் குறித்தும் பேசியிருப்பினம் அதுதான் பேச்சு சுமூகமா இருந்திருக்கு ... என்றார் முகத்தார்.

என்னவோ எங்கடை வாழ்க்கை மாதிரி சமாதானமும் அங்கு மிங்குமாய் அலையுது... மணியமே தொடர்ந்தார்.

போறபோக்கைப் பார்த்தால் எங்களட நீதிமன்றங்களிலை நடக்கிற காணிவழக்குகள் மாதிரியெல்லே சமாதானப் பேச்சுவார்த்தைகளும் ஒவ்வொரு தவணையின் போதும் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டு போகுதுபோல் தெரிகிறது... என அங்கலாய்த்தார் முகத்தார்.

அருகே ஆனந்தமாய் சுருட்டுப் புகைத்துக்கொண்டிருந்த சங்கக் கடை மனேச்சர் நோர்வேக்காரர் வந்தெல்லே பேசிக்கொண்டிருக்கினம் அவை ஒரு முடிவுக்கு வரத்தானே வேணும் என்றார்.

சமாதானம் அலைக்கழியிற மாதிரி நோர்வேத்தூதரும் அலைக்கழியவேண்டும் என்பதுதானே ஜனாதிபதியின் விருப்பம் என்று முடித்தார் முகத்தார்.

தெருவாசி

## அரசாங்கத்துக்கு எதிராக பிறிதொரு நீதிமன்ற தீர்ப்பு?

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராக மற்றுமொரு உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளியிடப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மையில் நீரப் பயன்பாட்டினைத் தனியார் மயப்படுததுவதென அரசு அறிவித்த நிலையில், இதற்கெதிராக ஜே.வி.பியினர் உயர் நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

ஜே.வி.பியினரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்று உயர்நீதிமன்றில் எடுக்கப்பட்டது. இதில், ஜே.வி.பியினரால் நீர்விநியோகத்தை தனியார் மயப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை விரும்பத்தக்கதல்ல. இது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்துவதாகவும், அரசாங்கத்துடன், அரசியல் ரீதியில் முரண்பாடுகளை வளர்கவுமே இது உதவுமெனத் தெரிவித்தனர்.

இவற்றினைக் கேட்டு விசாரணையைப் பூர்த்திசெய்த உயர் நீதிமன்ற நீதிபதி சரத் என்சில்வா - இது தொடர்பான தீர்ப்பினை ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் இரகசியமான முறையில் தெரிவிப்பார்.

இவ்வாறு இரகசியமாகத் தெரிவிக்கப்பட்ட தீர்ப்பினை சபாநாயகர் எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும்போது அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு பெரும்பாலும் அரசுக்கு பாதகமாகவே அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

கூட்டமைப்பினர் மீதான

# நாரந்தனை தாக்குதல் வழக்கு விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு மாற்றம்!

கடந்த பொதுத் தேர்தலின்போது நாரந்தனையில் வைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீது அரசியல் கட்சி ஒன்றைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டமை, பலர் காயப்படுத்தப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று யாழ். மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நடைபெற்ற விசாரணைகளின் போதே நீதிபதி இ.த.விக்னராஜா இந்த வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றிடம் பாரப்படுத்தினார்.

இந்த வழக்கில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மதனராஜா, முன்னாள் வேலணைப் பிரதேசசபைத் தலைவர் கருணாகர குருமூர்த்தி மற்றும் நெப்போலியன், ஜீவன் ஆகிய நால்வருக்கும் எதிராக 29 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2 பேரை கடுமையாகத் தாக்கி கொலைசெய்ததுடன், 17 பேருக்கு கடுங்காயங்களை விளைவித்ததாகவும், மூன்று வாகனங்களைத் தாக்கி சேதப்படுத்தியதாவும் இவர்கள் மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நீதிபதி இ.த.விக்கினராஜா மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த தனது அறிக்கையில் -

அரசியல் பணிக்காக நிராயுதபாணிகளாக சென்றவர்கள் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டமையானது ஜனநாயத்துக்கு அடிக்கப்பட்ட சாவுமணி எனக் குறிப்பிட்டுள்ளார்.

எதிரிகளாக குற்றம்சாட்டப்பட்டவர்கள் ஒரு கட்சியாகவும், அவர்களுக்கெதிரான சாட்சிகள் இன்னொரு அரசியற் கட்சியைச் சார்ந்தவர்களாகவும் உள்ளார்கள் எனத் தெரிவித்த நீதிபதி, மேல்நீதிமன்றம் அழைப்புவிடுக்கும்போது - எதிரிகளும், சாட்சிகளும் ஆஜராகி விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### குற்றப்புலணாய்வுப் பிரிவு திலங்க சுமதிபாலவிடம் விசாரணை

சிறிலங்கா ரெலிக்கொம், சிறிலங்கா கிறிக்கெற் சபையின் தலைவரான திலங்க சுமதிபாலவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் இரண்டு மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

சுமதிபால, பாதாள உலகக் கும்பலோடு தொடர்புகொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாகவே அவர் நீண்ட நேரம் விசாரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (01)

### யுத்த நிறுத்த....

பேச்சுக்கள் மூலம் மக்களின் அபிலாஷைகள் பூர்த்திசெய்யப்படக்கூடிய தீர்வையே விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

சமாதான வழியில் - தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும் உறுதிப்பாட்டுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண யார் முன்வந்தாலும், அவர்களுடன் பேசத்தயாராக இருப்பதாகவும்,

யுத்தம் தம்மீது திணிக்கப்படும் வரை, யுத்த நிறுத்தத்தைத் தாம் செம்மையாகக் கடைப்பிடிக்கப் போவதாகவும் இந்தச் சந்திப்பின்போது, புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உறுதியளித்திருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது, யுத்த நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, சகல தரப்புக்களிடமும் இருந்தும் தமக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டதாக, நோர்வே தூதுக்குழுவினர், புலிகளின் தரப்புக்கு எடுத்துக் கூறியதாகவும் தெரியவருகிறது.





கிளிநொச்சியில் தலைவர் பிரபாகரனை சந்தித்த பின்னர் கொழும்பைச் சென்றடைந்த நோர்வேக் குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசுவதை மேலுள்ள படங்களில் காணலாம்.

## மக்கள் நலன்புரிச் சங்கத்தினால் ஜனாதிபதிக்கெதிராக வழக்குத் தாக்கல்

தேர்தல் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர் ஒருவரைத் தெரிவுசெய்யுமாறு அரசியல் நிர்ணயசபை ஜனாதிபதிக்கு பரிந்துரைசெய்தபோதும் அவர் அதனைச் செய்யாமல் இழுத்தடித்து வருவதாகத் தெரிவித்து மக்கள் நலன்புரிச்சங்கம் - ஜனாதிபதி உட்பட 19 பேருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்குத் தொடர்பாக ஜனாதிபதியை நீதிமன்றத்துக்கு அழைக்கலாமா என சட்டமா அதிபர் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றிற்கு அறிவிக்கவேண்டுமென, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, அரசியல் நிர்ணய சபை பரிந்துரைசெய்த நபர் அரசியல் நெருக்கடியில் தொடர்புடையவர் என்ற காரணத்தாலேயே அவரைத் தெரிவுசெய்யவில்லையென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (01)

### ஹெல்கீசன் தலைமையிலான...

றும் தூதரக உதவியாளர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சுமார் இரண்டுமணி நேரம்வரை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கை அரசியலில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைகளைத்தாண்டி, சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக்கூடிய வழிமுறைகள் மற்றும் நோர்வேயின் கடப்பாடுகள் குறித்து, தலைவர் பிரபாகரன் நோர்வேக் குழுவினருக்கு விளக்கிக்கூறியதாகத் தெரியவருகிறது.

பேச்சுக்களைத் தொடர்ந்து, கிளிநொச்சி மத்திய மைதானத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தனர்.

தொடர்ந்து மதியம் 12.30 மணியளவில், நோர்வே சமாதானக்குழுவினர் உலங்குவானூர்தி மூலம் கொழும்பு திரும்பினர். (ப)

### பிரபாகர...

பந்தப்பட்ட பிரச்சினை, இந்த விடயங்களையிட்டு நோர்வே கவலை கொள்ளவில்லை.

தற்போதய அரசியல் நெருக்கடி நிலைமையை அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். சமாதான முயற்சிகளை மிக விரைவாக முன் எடுப்பதற்கு தொடர்ந்து உதவுமாறு பிரபாகரன் தன்னிடம் கேட்டதாகவும் ஹெல்கிசன் தெரிவித்தார்.

மேலும் போர்நிறுத்தம் முழுமையாக மதிக்கப்படும் எனவும், தற்போது படையினர், விடுதலைப்புலிகள் மற்றும் கண்காணிப்புக்குழுக்களிடையேயான உறவுகள் நன்றாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகளின்...

களையும் உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அந்த அமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (01)




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.